தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும்

பேராசிரியர் **திரு. அடிகளாசிரியர்**

தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும்

இயற்றியோர்

திரு. அடிகளாசிரியர்

ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்

சித்தநாதேச்சுராதீனம்

குகையூர்–அஞ்சல் 606 306

பதிப்பாசிரியர்

சோதிடரத்னா

முனைவர் அ. சிவபெருமான்

5, வெள்ளிவிழாச்சாலை

செயங்கொண்டசோழபுரம்–621 802

பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்

நாட்டு நலப்பணி வெளியீடு - 4

நூல்குறிப்பு

நூல்பெயர் : தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும்

ஆசிரியர் : திரு. அடிகளாசிரியர்

மொழி : தமிழ்

பதிப்பு : முதல் பதிப்பு

வெளியிட்டநாள் : டிசம்பர், 1996

உரிமை : திரு. அடிகளாசிரியர்

அளவு : டிம்மி 1/8

பக்கங்கள் : 103

படிகள் : 1000

விலை : ரூ. **15-00 (அடக்க விலைப் பதிப்பு)**

அச்சகம் : சபாநாயகம் பிரிண்டர்ஸ்
கீழவீதி, சிதம்பரம்

வெளியீட்டாளர்: திருவருள் நிலைய வெளியீட்டகம்
குகையூர் - அஞ்சல்
நயினார்பாளையம் - வழி
கல்லக்குறிச்சி - வட்டம்
விழுப்புரம் இராமசாமி படையாட்சியார்
மாவட்டம்
606 306
தமிழ்நாடு

தவத்திரு மறைமலை அடிகளார் நினைவு வெளியீடு

சென்னை பல்லாவரம் தவத்திரு மறைமலை அடிகளாரைத் தமிழுலகம் நன்கு அறியும். அவர், எழுதுவதெல்லாம் தனித் தமிழ் நடையாகிய செந்தமிழ் நடையிலேயே எழுதுவர். நான் மயிலம் தமிழ்க் கல்லூரியில் பேராசிரியனாக இருந்த பொழுது அவர் அக்கல்லூரிக்கு வந்திருந்தார். அவருக்கு வாழ்த்துப்பா ஒன்றெழுதி வரவேற்பு செய்தோம். அவ்வாழ்த்துப்பாவில் ஒன்றாகிய,

"எத்தனையோ புலவர்கள்முன்பு இருந்தார்கள் என்றாலும்
இவர்கள் எல்லாம்
அத்தனையும் தமிழ்த்தாயை ஆரியத்தின் அடிச்சியென
ஆக்கி வைத்தார்
உத்தியினில் மிகச்சிறந்த உரவோனே நீஉதிக்க
ஒருதான் ஆகி
முத்தனைய தமிழ்சிறக்கும் முறைகண்டாய் நீவாழி
முன்பி னோடே."

என்னும் இப்பாட்டைப் படித்தேன். அப்பொழுது மறைமலை அடிகளார் இடை மறித்து, இப்பாட்டில் கூறிய செய்தி எமக்குப் புனைந்துரையன்று, முற்றிலும் பொருந்துமென்று கூறினார்கள். இப்பாட்டில் கூறியபடி தமிழ்சிறக்கும் முறையைக் கண்ட தவத்திரு மறைமலை அடிகளார் தமிழ்த் தொண்டின் நினைவாக யான் இயற்றிய, தமிழ் மாண்பும் தமிழ்த்தொண்டும் என்னும் இவ்விலக்கியத்தை வெளியிடுகின்றேன்.

பதிப்புரை

மக்களில் பெரும்பான்மையினர் இது நல்லநெறி, இது தீய நெறி என்பதை அறிந்து நடப்பதில்லை. அந்நிலையில் முறை அறிந்த ஆற்றல் வாய்ந்த அரசனே நாட்டில் நல்ல நெறியை நாட்டக் கூடியவனாக உள்ளான். அஃதேபோல் மொழி உலகத்தில், மொழி பல கொடுமைக்கு ஆளாகாமல் செம்மை யாக நடப்பதற்கு அவ்வம் மொழி அறிஞர்கள் பல்வேறு வகை யில் முயன்று மொழியின் செம்மையை நிலை நிறுத்த வேண்டும். அவ்வகையில் எனது தந்தையார் **பேராசிரியர் திரு. அடிகளாசிரியர்** அவர்கள் அகவை முதிர்ந்த நிலையில், தமிழ்மொழி நன்றாக வளர்ந்து **''எங்கும் தமிழ்'' ''எதிலும் தமிழ்''** என்னும் நிலையைப் பெற வேண்டுமென்ற அவாவில், **''தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும்''** என்னும் இவ்விலக்கியத்தை இயற்றியுள்ளார்.

இவ்விலக்கியத்தின் நயங்களில் சில:

தமிழ்நாட்டில் ஆங்கிலம் மட்டும் படித்தவர்களுக்கு வேலை வழங்கக் கூடாது. தமிழ்தனை மிகக் கற்றவர்களுக்கு வேலை வழங்க வேண்டும் என்ற கருத்தை ஒரு பாடல் (32) தெரிவிக் கின்றது.

நம்மில் சிலர் ஆங்கிலமொழி சிறந்தது என்பர். ஆங்கில மொழி சிறந்தது என்றால் அதற்குரிய ஆங்கிலேயரும் அம் மொழியை விடச் சிறந்தவராவர். அப்படிப்பட்டச் சிறந்தவரை நாம் ஏன் நாட்டை விட்டுத் துரத்தினோம்? அவர்கள் நம்மை அடிமைப் படுத்தியதால் நாட்டை விட்டுத் துரத்தினோம். எனவே, ஆங்கிலேயர்கள் நம்நாட்டில் வாழ்வது சிறப்பில்லை என்றால் அவர் மொழியும் இங்கிருந்து வாழ்வதும், அரசாள்வதும் சிறப்பில்லை என்க. ஆங்கிலேயரை விரட்டிவிட்டு அவர்தம் மொழியை மட்டும் வைத்துக் கொண்டால் அது, **''மொழி அடிமை''** ஆகும். இக்கருத்தையே **''வெள்ளையனே வெளியே போ''** (33) என்ற பாடல் தெரிவிக்கின்றது.

முதல் படிப்புத் தாய்மொழிக் கல்வி; அடுத்த படிப்பு பிற மொழிக்கல்வி. தற்பொழுது நிலை மாறி விட்டது. பிறமொழிப் படிப்பு முதலில்தோன்றி விட்டது. தாய்மொழிப் படிப்பு இரண்டாம் நிலைக்கு அதாவது பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இந்நிலை மாறவேண்டும் அல்லது மாற்றப்பட வேண்டும். இந் நூலாசிரியர் தமிழ்மொழியின் மேல் நல்ல பற்றுடையவர். ஆனால் பிற மொழியின் மேல் வெறுப்பு இல்லாதவர். பிற மொழியைத் தனித்துக் கற்க வேண்டும் என்ற கொள்கை யுடையவர். அதாவது பறக்கும் பறவையின் நிலைபோல மேலோட்டமான நிலையிலே பிறமொழியைக் கற்கவேண்டும் என்ற கொள்கையுடையவர். இவர் இக்கருத்தை நாற்பதாம் பாட்டில் நினைவுபடுத்துகிறார்.

தமிழ்நாட்டுத் திருக்கோவில்களில் தெய்வத்தமிழ் வளர வேண்டும். திருக்கோவில் நிதியெல்லாம் தமிழுக்குச் செலவிடல் வேண்டும் என்ற கருத்தை மற்றோர் பாடல் (41) அறிவுறுத்து கின்றது.

இவ்வாறு இவ்விலக்கியத்தினுள்ளே எத்தனையோ நயங்கள் இடம் பெற்றுள்ளன.

நன்றிக்குரியோர்

தமிழ் ஆட்சிமொழி மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகனார் அவர்களிடம் அணிந்துரை வாங்குவதற்காக நேரில் சென்றபோது முகமலர்ச்சி யுடன் வரவேற்று, பல்வேறு பணிகளுக்கிடையே மிகக் குறுகிய காலத்தில் அரிய அணிந்துரையும் வழங்கி இவ்விலக்கியத்திற்குச் சிறப்புச் சேர்த்துள்ளார்கள். எனவே, அமைச்சர் அவர்கட்கு நன்றி கூறுவதில் ஆழ்ந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்விலக்கியத்தை வெளியிடப் பொருளுதவி நல்கிய எங்கள் ஆதீனச் சீடர்களுக்கும், உறவினர்களுக்கும் மகிழ்வுடன் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விலக்கியத்தை நல்லமுறையில் அச்சிட்டு வழங்கிய **சிதம்பரம் சபாநாயகம்** அச்சக உரிமையாளருக்கும், அவ்வச்சகப் பணியாளர்களுக்கும், முகப்பு அட்டையிலுள்ள **தமிழ்த்தாய்** உருவத்தை வரைந்தளித்த என் இனிய நண்பரும் ஓவியருமான **சிதம்பரம் சேது** அவர்கட்கும் நன்றி.

இலக்கியத்தின் செம்மைக்குப் பல்வேறு உதவிகள் புரிந்த என் உறவினப் பெருந்தகையாளர் சிதம்பரம் **உயர்திரு, சிங்காரவேல்** அவர்கட்கும், நண்பர் **திரு. சிவ. சுந்தரலிங்கம்** அவர்கட்கும், வழக்கம்போல் அச்சுப் பிழைகளை அன்புடன் திருத்தி உதவிய **புலவர் இரா. கணபதி** அவர்கட்கும், அச்சகம் சென்று அச்சுப் பிரதிகளை வாங்கி வருதல் முதலான உதவி களைச் செய்த உடன்பிறவா இளவல் **திரு. த. சோதி இராமலிங்கத்திற்கும்** நன்றி.

எப்பொழுதும் என்னுடைய பணிகளுக்குப் பக்கபலமாக, உறுதுணையாக விளங்கிவரும் என் குடும்பத்தார்களுக்கும், குறிப்பாகத் துணைவியார் **திருமதி சி. மகேசுவரி** என்கின்ற மதுரம் அவர்கட்கும், நன்றி.

இந்நூல் ஒன்றின் விலை ரூபாய் பதினைந்து மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில் இவ்வெளியீடு இலாபம் கருதாத அடக்கவிலை வெளியீடாகும்.

15—12—1996

அ. சிவபெருமான்

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்
பண்பாட்டுத்துறை அமைச்சர்
சென்னை-9

அணிந்துரை

அடிகளாசிரியர் தனித்தமிழ்த்தந்தை மறைமலையடிகளாரின் வழியில் தனித்தமிழ் பயின்றவர். நல்லாசிரியராகப் பணியாற்றியும், நற்றமிழ்க்குத் தொண்டாற்றியும் இன்று தம் எண்பத்தெட்டாம் அகவையிலும் தமிழ்த் தாய்க்குத் தன்னால் இயன்ற தொண்டினைச் செய்தாக வேண்டும் எனும் துடிப்பினால் **':தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும்''** எனும் நூலை உருவாக்கியுள்ளார். முறையாக இலக்கணத்தைப் பயின்றும் பயிற்றுவித்தும் உரம் பெற்றுள்ள அடிகளாசிரியரின் பாடல் வரிகளில் என்ன குறை சொல்ல முடியும்?

அவரது அகவைத் தளர்ச்சியையும் ஆர்வ மிகுதியையும் கருத்தில் கொண்டு ஒரே நாளில், ஒரே மூச்சில் நூலைப் படித்து, அதே வேகத்தில் அணிந்துரையும் எழுதி முடித்துள்ளேன். இது அவரது தமிழ்த் தொண்டுக்கு என் எளிய படையல் ஆகும்.

''தமிழ் நாட்டில் தமிழ் தாழ்ச்சி அடைந்திருக்கிறது. தமிழ் நாட்டு மக்கள் பலரிடத்தில் தமிழ்ப் பற்று இல்லாமையைத் தெளிவாக உணர்ந்து கொண்டேன்'' என்கிறார் அவர். பல நூல்களுக்கு உரை வரைந்தும், புதுநூல் பல படைத்தும் **மறைமலையார், திரு. வி. க.** போன்றோரிடத்தில் தொடர்பு கொண்டும் சிறப்புற்ற அவர் சொல்லும்போது மறுக்க முடியுமா? நானும் உடன்படுகின்றேன்.

ஆனால் அவரே ''கலைஞர் ஆளும் இக்காலம் தமிழுக்கு ஒரு பொற்காலமாக உள்ளது எனக் கருதுகின்றேன்'' என்று நம்பிக்கை முழக்கம் செய்திருக்கிறார். **கலைஞர் அரசின் இப்போதைய தமிழ்ப் பணிக்கு இவரது நம்பிக்கைதான் உண்மையான துணை.**

நாடு எப்படி?

'தன்னலக் கருத்தால் பொன்னினைப் பொருளைத்
தமக்கென வளர்த்தலே யன்றி,
உன்னுறு தமிழை வளர்த்திடக் கருதா
உயர்ந்தவர் வாழ்ந்திடும் நாட்டில்,

என்கிறார். பாடலை எழுதியதோடமையாது அதற்கு எளிய உரை விளக்கமும் தந்திருப்பது சிறப்புக்குரியதாகும்.

''இனிமையும் நேர்மையும் தமிழ் எனலாகும்'' என்று பிங்கல நிகண்டு தரும் செய்திகள் அவர் எழுதிய உரை வாயிலாகத்தான் நமக்குக் கிடைக்கின்றன. எனவே பாடலாலும் உரையாலும் நமக்குத் தமிழ் உணர்வையும், அறிவையும் ஒரு சேர ஊட்டும் நூலாக இஃது அமைந்துள்ளது.

'தமிழ்நாட்டுக் கோயில்களில் வடமொழிக்கே
தலைமையெனும் தவறைப் போலத்
தமிழ்நாட்டின் அரசியலில் அயல்மொழிக்கே
தலைமையெனும் தவறும் ஆயின்,
உமிழ்நாட்டும் அயலாட்சி ஒழிந்துவிட்ட
காலத்தும் ஒழியா தாகித்
தமிழ்நாட்டின் அரசியலில் அயல்மொழியே
தலைமைபெறல் தகுதி ஆமோ?'

என்று அவர் தொடுக்கும் வினா முற்றிலும் சரியானது. 40 ஆண்டுகளாகியும் ஆட்சிமொழிச் சட்டம் சரியாகச் செயற் படுத்தப்படாமல் இன்னும் ஆங்கிலத்தையே முதன்மைப்படுத்தும் செயல் கண்டு வருந்தும் எனக்கு இது பளிச்சென விளங்குகிறது.

அந்த இழி செயலையும் அவரே குறிப்பிடுகிறார்.

'வெள்ளையனே வெளியேபோ
எனவிரட்டி அகற்றிவிட்டே
வெள்ளையர்தம் மொழியதனை
விரும்பிஅர சினில்வைத்தே
ஒள்ளியநற் றமிழ்தம்மை
உணர்வின்றிப் புறக்கணித்தல்
எள்ளுதற்கே உரித்தான
அடிமைநிறை இழிசெயலே'

மேலும் எப்படித் தொண்டு செய்ய வேண்டும் என்றும் தெளிவு படுத்துகிறார்.

''நாட்டுப்பற் றதுபெற்று நற்றமிழை
வளர்ப்பவர்தாம் நன்றாய் ஒன்றிக்
கூட்டுப்பற் றொன்றாலே கூடிநின்று
தொண்டுசெயின் கூடும் நன்றே''

நாட்டுப் பற்று ஒன்றாலே கூடி நின்று தொண்டு செய்ய வேண்டும் என்கிறார். பாரதியும் இப்படித்தானே தலையில் அடித்துக்கொண்டான்.

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு''

என்றானே பாரதி. 1921 க்கு முன் சொல்லியே கேட்கவில்லை. 1997 ஆம் ஆண்டிலாவது **மரத்** தமிழர்களுக்கு உறைக்குமா?

தமிழ்க் கூட்டத்தில் தமிழில் பேசாமல் ஆங்கிலத்தில் பேசுபவர்களைச் சாடுகிறார்.

'உமிழ்கின்ற இவர்பேச்சால் உறக்கம் அன்றி
ஒருவருக்கும் உணர்வென்ப துதித்திடாதே'

இன்னும் எத்தனையோ செய்திகள் உண்டு. நூலைப் படிப்பார்க்கு அவற்றை விட்டுவிடுகிறேன்.

1937 இல் **''எங்களூர்''** என்று அவர் எழுதிய நூலிலேயே **'தமிழ்த்தொண்டு'** எனும் தலைப்பில் 13 பாடல்கள் இயற்றி யுள்ளார்.

அறுபதாண்டாகியும் அவர் நோக்கம் நிறைவேறவில்லை. அவரது ஏக்கம் தீரவில்லை. இந்த நூலிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் உண்மை அதுதான்.

எனினும்

''அவர் ஏக்கம் தீர்ப்போம்; தமிழுக்கு
ஏற்றம் சேர்ப்போம்''

எனும் நம்பிக்கையை அவர்க்கு வழங்க விரும்புகிறேன். அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து கலைஞர் ஆட்சியின் தமிழ்த் தொண்டினைக் கண்டு மகிழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

* * *

இலக்கிய ஆசிரியன் முன்னுரை

தோற்றுவாய்:

தன்நிலத்தினில் குறுமுயல் தந்தியின் வலிதென்று
இந்நிலத்தினில் பழமொழி யாவரும் இசைப்பார்
ஆனால்.
தன்நிலத்தினில் பெருந்தமிழ் தாழ்ச்சியை அடையின்
எந்நிலத்தினில் உயர்ந்திடும் அறிஞரே எண்ணீர்.

தான் வாழும் இடமாயின் சின்ன முயலும் யானையைக் காட்டிலும் வலிதாக அங்கே வாழுமென்று உலகத்தவர் வழங்கும் பழமொழிக்கு மாறாக இன்று தமிழ்நாட்டிலே தமிழ்மொழி தாழ்ச்சியை அடைந்திருக்கின்றது.

தாழ்ச்சி என்ன?

எங்களூரின் தென்புறத்திலே உள்ளது வெண்பாவூர், என்னும் சிற்றூராகும். அவ்வூரிலே வாழ்ந்திருந்த பெருநிலக்கிழாரும் என் நண்பருமாகிய உயர்திரு. மார்க்கண்டேயனார் என்பவர் அவ்வூரில் கழகம் ஒன்றை வைத்து நடத்தி வந்தார். அக்கழகக் கூட்ட மொன்றில் நான் தமிழைப் பற்றிச் சிறப்பித்துப் பேசினேன். அப்பேச்சைக் கேட்ட ஒருவர் என்னிடம் வந்து, **''தமிழ்நாட்டிலே திருக்கோயில் முதலானவற்றில் வடமொழியே வழங்குகின்றது. மக்களிற் பலர் திருமணம் முதலான சடங்குகளை வடமொழி மந்திரத்தினாலேயே நடத்தி வருகின்றனர். அ:து ஒரு புறமிருக்கத் தமிழ்நாட்டு அரசியலும் ஆங்கில மொழியிலேயே நடை பெறுகின்றது. மேலே சொன்ன காரணங்களால் நமக்கு வட மொழியும் ஆங்கில மொழியுமே வேண்டியதாக உள்ளன. தமிழ் மொழி எதற்கு வேண்டும் என்று வினவினார்''.**

அதைக்கேட்ட பொழுதுதான் தன்நிலத்தினில் தமிழ்மொழி தாழ்ச்சி பெற்றுள்ளது என்ற செய்தி எனக்குத் தெளிவாகப் புலனாயிற்று. எனவே, தமிழ்மொழி தன்நிலமாகிய தமிழ் நாட்டில் தான் பெற்றுள்ள தாழ்ச்சி நீங்கித் தலைமை பெறல்

வேண்டும் என்பதும், ஆங்கில அடிமை நீங்கி உரிமை பெற்ற இப்பொழுதுள்ள தமிழகத்தில் தமிழ் நல்ல நிலையில் மேலும் மேலும் வளர வேண்டும் என்பதும், நம்நாட்டிலுள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் ஒத்த கருத்தாய் இருக்குமென்று யான் கருதுகிறேன்.

என் வாழ்க்கையில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகள்

பல யாண்டுகளுக்கு முன்னர் அச்சான தமிழ் இலக்கண நூல்களை யான் ஆழ்ந்து படித்து வந்தேன். அவற்றில் பல பிழைகள் அங்கங்கே காணப்பட்டன. இலக்கணநூல் என்பது மொழி திருந்துவதற்குக் கருவியான ஒன்றாகையால் இவற்றை ஆராய்ந்து பிழையறப் பதிப்பித்தால் அது தமிழுக்குச் செய்யும் நல்ல தொண்டெனக் கருதினேன்.

யான் எண்ணிய கருத்தைத் தமிழ் உலகத்திற்கு அறிவிக்க வேண்டுமென்ற நோக்கில் **"இலக்கண நூல்களில் காணப்படும் பிழைகள்"** என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றைத் தயாரித்தேன். அக்கட்டுரையில் இப்பொழுது அச்சாகியுள்ள தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களில் காணப்படும் சில பிழைகளை மட்டும் குறிப்பிட்டுத் திருத்தி இவ்வாறே மற்ற பகுதிகளும் திருத்தப்படவேண்டும். அவற்றைத் திருத்துவதற்குக் கருவியாக அவற்றைப் பற்றிய ஓலைச்சுவடிகளை நாட்டிலே தேடிப்பெற்று அறிஞர்களைக் கொண்டு ஆராய்ந்து நல்ல பதிப்புக்களை வெளியிடல் வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை எழுதியிருந்தேன்.

மேற்குறிப்பிட்ட அக்கட்டுரையைக் கரந்தை தமிழ்ச் சங்கத்தார் நடத்தி வரும் **'தமிழ்ப்பொழில்'** என்னும் இதழில் கட்டுரையாக வெளியிடச் செய்தேன். அதுவும் அன்றி, அக்கட்டுரையைத் தனியாகத் தயாரித்துப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட முப்பது பேரறிஞர்கட்கு அனுப்பி வைத்தேன். இவர்களில் பலரிடத்திலிருந்து எந்தக் கருத்தும் எனக்கு வரவில்லை. ஆனால் **அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு: லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்** அவர்களிடத்திலிருந்து மட்டும் பதில் வந்தது. பலரிடத்திலிருந்து பதில் வராமையால் நாட்டில் தமிழ்ப் பற்றே இல்லையோ என்ற எண்ணம் எனக்குத் தோன்றிற்று. எழுதிய ஒருவரும் நீங்களே ஆராய்ந்து பிழைகளை எல்லாம் தொகுத்துப் பத்திரிகையில்

கொடுத்துவிடுங்கள். நூலை அச்சிடுவோர் பயன்படுத்திக் கொள்வார் என்று அப்பணியை என் மேலே சுமத்தினார். அதன் பிறகு நானே ஒரு இலக்கண நூலை எடுத்துக் கொண்டு. அதனை ஆராய்ந்து வெளியிடுவோம் என்று கருதினேன். அக் கருத்தின்படி தொல்காப்பியம், எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரையை ஆராய்ந்து வெளியிடுவோம் என முடிவெடுத்தேன். என்னிடம் இளம்பூரணர் உரை ஓலைச்சுவடிகள் இரண்டு இருந்தன. ஏனைய அச்சுப் புத்தகங்களையும் தயாரித்துக் கொண்டு ஆராய்ச்சியைத் தொடங்கினேன். அவ்வாராய்ச்சி நான்கு ஆண்டுகளில் முடிவுற்றது. நல்ல திருந்திய அச்சுப்பிரதியை எழுதி முடித்தேன். கடும் உழைப்பைப் பயன்படுத்தி எழுதிய அப்பிரதி வீணாகாதவாறு அதனைப் புத்தகமாக அச்சிட்டுத் தமிழுலகத்திற்குத் தரவேண்டுமென எண்ணினேன். அதனை அச்சிடுவதற்கு மிகுதியான பொருள் வேண்டியிருந்தது. என்னிடம் அவ்வளவு பொருளில்லை. அதனால் எழுத்ததிகாரம் அச்சிடும் கருத்தைப் பல அன்பர்களிடமும், சிறப்பாகத் தமிழ்த் தொண்டர்களிடமும் கூறினேன். சில திருமடத் தலைவர்களை யும் அணுகினேன். கூறியென்? அணுகியென்? அவர்களெல்லாம் எழுத்ததிகாரம்அச்சிடுதலைத் தமிழ் மொழிக்குச்செய்யவேண்டிய சிறந்த தொண்டென்று கருதி உதவ முன்வரவில்லை. இந்த நிலையில் அவர்களிடம் கூறியதற்கும், அணுகியதற்கும் என் உள்ளம் மிகவும் நாணமடைந்தது. இந்த இடத்திலும் தமிழ் நாட்டு மக்கள் பலரிடத்தில் தமிழ்ப்பற்று இல்லாமையை நான் தெளிவாக உணர்ந்து கொண்டேன் பிறகு மிக முயன்று எழுத்ததிகாரப் பதிப்பை நானே அச்சிட்டேன்.

யான், என் வாழ்நாளில் தமிழ்ப் பற்றுடையவர்களைப் பலராகப் பார்க்கவில்லை. எங்கேயோ இங்கொருவரும் அங்கொரு வருமாகச் சிலரே தமிழ்ப்பற்றுடையவராய் இருக்கக்கண்டு,

"தன்னலக் கருத்தால் பொன்னினைப் பொருளைத்
தமக்கென வளர்த்தலே யன்றி,
உன்னுறு தமிழை வளர்த்திடக் கருதா
உயர்ந்தவர் வாழ்ந்திடும் நாட்டில்"

என்ற பாடலை எழுதினேன்.

மற்றொரு சிறு நிகழ்ச்சியையும் குறிப்பிட விரும்புகின்றேன். நான் அச்சிட்ட புத்தகங்களை நானே விற்பனை செய்ய முயன்ற

துண்டு. ஒருநாள் என் புத்தகங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு ஒரு நகரத்தில் மிகப்பெரியவர் என்று கருதப்படும் ஒருவரை அணுகினேன். அவர், ஒரு புத்தகம் கூட வாங்கிக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் அவர், ''இவ்வூரிலே மற்றொரு செல்வந்தர் இருக்கின்றார், அவர் நூல்நிலையம் வைத்து நடத்துகின்றார்; அவரிடம் சென்றால் இவற்றை எடுத்துக்கொள்வார். என்று'' ஆற்றுப்படுத்தினார். நான் அவரை நாடிச் சென்றேன். அவர், என்னுடைய புத்தகங்களை எல்லாம் பார்த்துவிட்டு, இன்று வெள்ளிக்கிழமை ஆதலால் இதில் என் பணப்பெட்டியைத் திறந்து செலவிடும் வழக்க மில்லை. அதனால் புத்தகங்களை எடுத்துக்கொள்ள முடிய வில்லை என்று தெரிவித்தார். இதனைக் கேட்ட நான் பணப் பற்றினையும் தமிழ் மொழிப்பற்று இன்மையையும் அறிந்து சிரித்துக்கொண்டே வெள்ளிக்கிழமையில் பணப்பெட்டியைத் திறந்து பணமெடுக்க நீங்கள் விரும்பாவிட்டாலும், வெள்ளிக் கிழமையன்று இப்புத்தகங்களை எல்லாம் நூல்நிலையத்திற்கு அன்பளிப்பாகவே கொடுத்து விடுகின்றேன் என்று கூறி எடுத்துக் கொண்டு போன புத்தகங்களை எல்லாம் அவரிடம் கொடுத்து விட்டுத் திரும்பினேன்.

இங்ஙனம் மேற்கூறப்பட்ட பல நிகழ்ச்சிகளைப் போன்ற நிகழ்ச்சிகளால் தமிழ் நாட்டிலே தமிழ்மக்களிடத்திலே தமிழ்ப்பற்று இல்லையே என்பதை அறிந்து மிக வருந்திய உள்ளத்தோடு இருக்கின்றேன். அந்த வருந்திய உள்ளத்தின் அடியிலிருந்து தோன்றியதுதான் இந்த இலக்கியமாகும் என்பதைப் பொறுப் புள்ள தமிழ் உலகத்துக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பொழுது அமைந்துள்ள நல்ல அரசியல்

நல்ல காலமாகத் தமிழ்ப்பற்றுடைய அரசியல் ஒன்று தமிழகத்தில் வந்துள்ளது. இதில் தமிழ்ப்பற்றே உருவமான **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்** முதலமைச்சராக விளங்குகின்றார். அவருக்குத் துணையாகத் தமிழே உருவெடுத்தாற் போன்ற **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடி மகனார் அவர்கள்** தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண் பாட்டுத்துறை அமைச்சராக வந்துள்ளார்கள். ஏனைய அமைச்சர்களும் தமிழ்ப் பற்றில் சிறந்தவர்களாகவே உள்ளனர். **எனவே இக்காலம் தமிழுக்கு ஒரு பொற்காலமாக உள்ளது எனக்**

கருதுகின்றேன். இச்சூழலில் தமிழக அரசு செய்து வரும் பெரிய தமிழ்த்தொண்டிற்கு என்னுடைய இலக்கியம் ஒரு சிறு தூண்டு கோலாக அமையுமென்று கருதி இவ்விலக்கியத்தை வெளியிடு கின்றேன்.

என் முயற்சியும் உதவியோரும்

நான் மிகவும் முதுமையடைந்துள்ளேன். அதனுடன் நரம்பு வலிவிழந்த நோயும் எனக்கு ஏற்பட்டுள்ளது. எங்கும் வெளியிடங்கட்கு செல்லமுடியாமல் சொந்த ஊரான குகை யூரிலே என் சொந்த வீட்டிலேயே தங்கியுள்ளேன் இந்த நிலை யில் மிக முயன்று, மிக வருந்தி இவ்விலக்கியத்தை எழுதினேன். இவ்விலக்கியத்தை நன்கு படைப்பதற்கு வேண்டிய உடல் வலிமை என்னிடம் இப்பொழுது இல்லை என்றாலும் தமிழ் மொழி நன்றாக வளரவேண்டுமென்ற குறையாத உணர்வு ஒன்றே மேலோங்கி உள்ளதால் அவ்வுணர்வால் மெய்வருத்தம் பாராமல் இலக்கியத்தைப் படைக்க முயன்றேன். **இவ்விலக்கி யத்தை 5—9—1996-ஆம் நாளில் எழுதத் தொடங்கினேன்.** எங்களூரில் அருள்மிகு அய்யனார் திருக்கோவில் பூசாலியார் குடும்பத்தைச் சார்ந்த **திரு. சி. முருகன்** என்பவர் யான் சொல்லச் சொல்ல எழுதித்தரும் பணிக்கு அவ்வப்போது உதவினார். இது எனக்குப் பேருதவியாக அமைந்தது. **இவ்வாறு இவ்விலக்கியத்தை 4—10—1996-ஆம் நாளில் எழுதி முடித்தோம்.**

இதனை அச்சிடுவதற்கு முயன்றேன். குகையூர் திருமூல சித்தநாதர் ஆதீனத்தைச் சார்ந்த குருபரம்பரையினர்க்குச் சீடராய்த் தற்பொழுது ஒசூரிலே தங்கி **சிவா சீனிவாசா** என்கின்ற பெயரில் கட்டிடத் தொழில் புரிந்துவரும் **திரு: ச.க. சீனிவாசன் என்பவர் மூன்றாயிரம் வெண் பொற்காசுகளையும்,** தற்போது தாரமங்கலம் பேரூராட்சி மன்றத் தலைவராய் உள்ள **திரு சு. பூபதிராசன்** என்பவர் **மூன்றாயிரம் வெண் பொற்காசுகளையும்,** செயங்கொண்ட சோழபுரத்தில் வாழ்ந்துவரும் வழக்கறிஞரும் என் மகள் வயிற்றுப் பேரனுமாகிய **உயர்திரு. ச. மெய்ஞ்ஞான சேகரன் பி.எல்., பிஎட்., அவர்கள் ஓர் ஆயிரம் ரூபாயும்,** என் மாணவரும் ஓய்வுபெற்ற தமிழாசிரியருமாகிய சின்ன சேலம் **உயர்திரு துரை. கந்தசாமி அவர்கள் எழுநூறு ரூபாயும்,** தமிழ்நாடு அரசு உடல்நல ஆய்வுத்துறையில் பணி ஆற்றிவரும் **சின்னசேலம் உயர்திரு. எ. கிருட்டிணமூர்த்தி அவர்கள் ஐநூறு**

ரூபாயும் தந்துதவினார்கள். இவைபோக மிகுதியான பொருளை நானே செலவிட்டு இவ்விலக்கியத்தை அச்சிட்டுள்ளேன்.

அச்சகப்பணி

இலக்கியத்தை இயற்றும் முதல் பணி நிறைவுற்றது. பின்னர் இதனை அச்சிடும் பணி தொடங்க வேண்டும். **என் இளைய மகன் அ. சிவபெருமானை** அழைத்து இதனைத் திருத்தம் செய்து அச்சுக் காப்பி தயார் செய்து பதிப்பாசிரியனாக இருந்து இவ் விலக்கியத்தை நாட்டுநலப்பணி வெளியீடாகப் பதிப்பித்துத்தர வேண்டுமென்று கூறி கையெழுத்துப்படியினையும், அச்சிட வேண்டிய பொருளையும் கொடுத்து அச்சிடத் தொடங்கு, என்று கூறி அனுப்பி வைத்தேன். அவரும் என் வேண்டுகோளுக்கு இசைந்து இரவும் பகலும் அதுவே நினைவாயிருந்து மிகவும் முயன்று நல்லமுறையில் அச்சிட்டு உதவினார்.

என் இளையமகன் **திரு. அ. சிவபெருமானைப்** பற்றி இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அவர் என்னுடைய படைப்புக்களை நூலாக்கி வெளியிடுவதில் மிக ஆர்வம் கொண்டவர். இதற்கு முன் என்னுடைய இலக்கியங்களாகிய தண்ணிழல், தொழிலியல், மெய்ப்பொருட்காதை, சிவபுராணச் சிற்றுரை, பல்சுவைப் பண்ணத்திப்பாடல்கள், விலையேற்றமும் வாழும்வழியும் ஆகிய இவற்றை எல்லாம் நன்கு பதிப்பித்துக் கொடுத்தவர். தமிழ் மொழியின் மேல் அளவற்ற பற்றுடையவர். எனக்குப் பின்னால் என் தமிழ்த்தொண்டுகளைச் செய்வதில் ஊக்கமுடன் உழைப் பவராவர். அவரின் பெருமுயற்சியால் என்னுடைய நூல்கள் அச்சேறித் தமிழகத்தில் உலா வருகின்றன. அப்பணியில் அவர் மேன்மேலும் சிறப்படைய என் நல் வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அச்சகச் செயல்களுள் முதன்மையானது மெய்ப்புத் திருத்தும் பணியாகும். அப்பணியில் ஆற்றல் வாய்ந்தவராக விளங்கிவரும் **அண்ணாமலைநகர் புலவர் இரா. கணபதி அவர்கள்,** என்பால் பற்றுக் கொண்டு உடனுக்குடன் மெய்ப்புக்களைத் திருத்தி உதவினார். அவரின் இவ்வுதவிக்கு என் உளங்கனிந்த வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்து

தமிழக அரசு செய்துவரும் சிறந்த செயல்கள் பலவற்றுள் **''தமிழுக்கு அமைச்சகம்''** அமைத்தது தமிழ்மொழிக்குச் செய்த மிகச் சிறந்த மாபெருந் தொண்டாகும். அவ்வமைச்சகம் தமிழ்ப் பணியில் மிகச்சிறந்து விளங்க வேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொண்டு, தமிழக அரசிற்கு என் நல்வாழ்த்தினையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விலக்கியத்தை எழுதித்தரும் பணிக்குப் பேருதவியாக இருந்த **திரு சி. முருகனுக்கும்,** இப்பதிப்பிற்குப் பொருள் உதவிய மேற்குறிப்பிட்ட அன்பர்களுக்கும், நேருக்கு நேராய் நின்று அச்சிட்டு உதவிய என் இளையமகன் **அ. சிவபெருமானுக்கும்,** மெய்ப்புக்களைத் திருத்தி உதவிய **புலவர் இரா. கணபதி** அவர்கட்கும், நல்லமுறையில் அச்சிட்டு வழங்கிய சிதம்பரம் சபாநாயகம் அச்சக உரிமையாளர் **திரு, கௌதம சங்கர்** அவர் கட்கும், அச்சகப் பணியாளர்களுக்கும் என்னுடைய அருள்கலந்த நல்வாழ்த்தினையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தென்தமிழே! தேன்தழிழே! திகழ்உலகப் பெருந்தமிழே!
என் எளிய நாவகத்தும் இயங்குகிற என்தமிழே!
அன்படியாம் அறம்நல்கி ஆக்கமுறும் பொருள்உதவி
இன்பநிலை தருகின்ற எழில்தமிழே நீ வாழ்க.

இங்ஙனம்

1—12—1996

திரு. அடிகளாசிரியன்

இறைவன் துணை

தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும்

பாயிரம்

காப்பு

எங்கள் தமிழ்நாட்டில் எல்லோர்க்கும் நன்மைசொலத்
தங்கத் தமிழ்ப்பாட்டி தானும் மனங்கொண்டு
துங்கக் கரிமுகத்துத் தூமணியைக் கைகூப்பிச்
சங்கத் தமிழ்மூன்றும் தாவென்று கேட்டாற்போல்
இங்கும்அத் தூமணியை ஏத்தி அடிதொழுது
சங்கத் தமிழ்மூன்றும் தாவென்று கேட்கின்றேன்
தங்கும் கனிபலவும் தந்து.

தமிழ்ப்பாட்டி நன்மைசொலக் கருதித் துங்கக் கரிமுகத்துத் தூமணியைக் கைகூப்பிச் சங்கத் தமிழ் மூன்றும் தாவென்று கேட்டாற்போல நானும் அத்தூமணியைக் கைகூப்பித் தொழுது கனிபல தந்து சங்கத்தமிழைத் தாவென்று கேட்கின்றேன் நன்மை சொல.

இப்பாட்டு 'பாலும் தெளிதேனும்' என்று ஔவையார் பாடிய பாட்டின் கருத்தை அடியாகக் கொண்டது.

தமிழ் வாழ்த்து

க. எங்கள் தமிழே! பழந்தமிழே!
இனிமை கனிந்த செந்தமிழே!
கொங்குத் தமிழே! தென்தமிழே!
குலவும் சோழர் தேம்தமிழே!
திங்கள் போல உவகைதரும்
தெய்வத் தமிழே! தெளிதமிழே!
பொங்கும் தமிழே! முத்தமிழே!
புதுமைத் தமிழே! நீ வாழ்க!

"செந்தமிழ்" இலக்கண மரபு பெற்ற தமிழ்ச் சொல்லால் வருதலின் 'இனிமை கனிந்த செந்தமிழே' என்று கூறப்பட்டது. பாரதியாரும்,

"செந்தமிழ் நாடென்ற போதினிலே – இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்பர். கொங்குத் தமிழ், சேரநாட்டுத் தமிழ். தென் தமிழ், பாண்டிய நாட்டுத் தமிழ்; சோழர் தேம் என்றது சோழ தேசத்தை; அந்நாட்டுத் தமிழைச் சோழியத்தமிழ் என்பர்.

நான் செய்யும் தமிழ்த்தொண்டு

உ. தன்னலக் கருத்தால் பொன்னினைப் பொருளைத்
தமக்கென வளர்த்தலே யன்றி,
உன்னுறு தமிழை வளர்த்திடக் கருதா
உயர்ந்தவர் வாழ்ந்திடும் நாட்டில்,
என்னுடை நாட்டு மொழியினை வளர்க்க
எண்ணிய பொதுநலக் கருத்தால்
பன்னுறு பாடல் படைத்திடு கின்றேன்
பைந்தமிழ் அன்றிவே றில்லேன்.

தன்னலக் கருத்தால் பொன்னையும் பொருளையும் மிக வளர்க்கும் உயர்ந்தவரிடம் பொதுநலக்கருத்தால் வளர்க்க வேண்டிய தமிழ்வளர்ச்சிப் பற்று அவர்களுக்கு உண்டாவ தில்லை என்பதைக் குறிப்பாக, இப்பாட்டு உணர்த்துகின்றது. இங்கே 'உயர்ந்தவர்' என்றது, புகழின்றிப் பெருகிய செல்வம் உடையவரைக் குறிக்கும். பொதுநலம் கருதுபவர் தம்மிடத்தில் உள்ள பொருளைப் பொதுநலத்திற்கே பயன் படுத்திக் கொள்வர். என்னிடம் பொன்னும் பொருளும் இல்லை. பைந்தமிழே இருக்கின்றது. அப்பைந்தமிழைப் பொதுநலத் தொண்டிற்குப் பயன்படுத்தும் முகத்தால் தமிழ் வளர்ச்சி கருதிப் பல பாடல்களை இயற்றுகின்றேன்.

உன்னுறு தமிழை — நாட்டின் பொதுநலப் பொருளாக உன்னப்படும் தமிழை.

இதுவும் அது

கூ. இனிமை நேர்மை மென்மையெனும்
இவையே தனது பண்பாகத்
தனிமை பெற்ற பெருமொழியாய்த்
தழைக்கும் தமிழின் திறம்பற்றிக்
கனிமை தோன்ற உரைக்கின்றேன்;
கருதும் கற்றோர் தம்முன்பே;
துனிமை இன்றிக் கேட்கின்ற
தூயோர் என்னும் கருத்தாலே.

தமிழ் மொழியைக் கற்ற தூயவரே யான் கூறும் தமிழின் திறத்தை அறிந்து செயற்படுவார் என்க.

துனிமை — வெறுப்பு.

தமிழ் மாண்பு

மக்களின் சிறப்பு

சு. பல்வேறு செய்திஅமை நூல்நெறியில்
தப்பாமல் பயனே தோன்றத்
தொல்வேறு செய்திகளின் இயல்மொழியும்
காப்பியந்தான் தோன்றச் சொல்லும்
ஒல்வேறு பொருள்தம்முள் மக்கள்தமை
உயர்திணையாய் உயர்த்திக் கூறி
நல்வேறு படஅவரை ஆறறிவு
உடையரென நாடிக் கூறும்.

இயல்மொழியும் காப்பியம் – இலக்கணத்தைக் கூறுகின்ற தொல்காப்பியம் என்னும் நூல். அந்நூலானது சொல் – கிளவியாக்கத்தில் ''உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே'' (1) என்று மக்களை உயர்திணைப் பொருளாக உயர்த்திக் கூறிவிட்டு, பின், அம்மக்களை மரபியலில்

''மக்கள் தாமே ஆறறி வுயிரே என்று (33) சிறப்பித்துக் கூறும். இவற்றால் மக்களின் சிறப்பினை உணர்க.

தமிழ்மொழிச் சிறப்பு

ரு. ஆறறி வுடைய மக்கள்தாம் பேசும்
அரியவாய்க் கருவியாம் மொழிகள்
ஏறிய உலகில் பற்பல ஆகும்;
இசைக்கும்அப் பலமொழி தம்முள்
''கூறிட எளிதாய்க் கேட்டிட இனிதாய்க்
கூடுறும் மொழிதமிழ் ஆமே'';
தேறிடத் தேவும் கேட்டிட விரும்பும்
தெய்வநன் மொழியும்ஆ கீடுமே.

உயர்திணை என உயர்த்திக் கூறப்படும் ஆறறிவு படைத்த மக்கள் தம் வாயினையே கருவியாகக் கொண்டு பேசப்படும் மொழிகள் உலகில் பலவாக இருக்கும். அப்பல மொழிகளுள், பேசுவார்க்கும் பேசுதற்கு எளிதாயும், அதனைக் கேட்பவர்க்குக் கேட்டற்கு இனிதாயும் அமைந்த இயல்புமொழி, தமிழ் மொழி ஒன்றேயாகும்.

அ.:தன்றி, எங்கும் தங்கியுள்ள தெய்வமும் அன்பர்தம் வாயால் பாட அதனை விரும்பிக் கேட்கும் தெய்வ மொழி யாகவும் அது உள்ளது. இக்கருத்தை

''நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பின் மிக்க
ஆச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல்
நம்மைச் சொல்தமிழ் பாடு'' [பெரிய-தடுத்-70]

என இறைவன் திருநாவலூரரைக் கேட்டுக் கொண்டதை இங்கு நினைவு கூர்க.

தமிழ்மொழி கற்பதற்கு எளிய மொழியாகும். ஆரிய மொழி கற்பதற்குக் கடினமான மொழியாகும்.

இதுவும் அது

கூ. பழமை ஆகும் பேரிறைவன்
பாருள் என்றும் இருப்பதுபோல்
பழமை பெற்ற மொழியாகப்
பகரும் தமிழைக் கம்பனென்பான்
வழமை ஆக என்றும்உள
வாழுந் தமிழென் றிசைத்தானே;
மழவாய் என்றும் உளவாக
மதித்து மொழிவர் பேரறிஞர்.

"அகத்தியர் வடதிசையிலிருந்து வந்து தென்பொதியத்துள் தங்கித் தமிழை உண்டாக்கினார்", என்று கூறுபவருடைய கருத்திற்கு மறுப்புத் தோன்றுமாறு, கம்பர் "தமிழ் என்றும் உள்ளது என்றும், அதைத் தெரிந்து இயம்பி அதனாலே தமிழ் முனிவன் என்று பெயர்பெற்று இசைபெற்றான், என்றும் பொருள் தோன்றுமாறு,

கம்பராமாயணம், ஆரண்யகாண்டம், அகத்தியப் படலத்தில்,

"நின்றவனை வந்தநெடி யோனடி பணிந்தான்
அன்றவனு மன்பொடு தழீஇயழுத கண்ணான்
நன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்றுமுள தென்றமி ழியம்பிஇசை கொண்டான்"

என்று கூறுவாராயினர்,

தமிழ் பழமையும், என்றும் உள தன்மையாகிய நித்தியத் தன்மையும், மழவுத் தன்மையும் ஆகிய இவற்றை எல்லாம் உடையது என்க.

தமிழின் மழவுத் தன்மையை மனோன்மணீயம், "உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன் சீரிளமைத்திறம்" என்று கூறும்.

வழமை — வழக்கம்

மழவு — இளமை

இலக்கணம் அமையப்பெற்ற தமிழ்மொழிச் சிறப்பு

எ. எழுத்திலா மொழியும் சொல்லின்
இயலிலா மொழியும் உண்டே;
எழுத்துசொல் இவற்றின் மேலாய்
எண்ணுறு பொருளும் என்ற
வழுத்துமூன் றிலக்க ணங்கள்
வகைபெற வரையப் பெற்றே
செழுத்தபல் வனப்புத் தோன்றச்
சிறந்திடும் தமிழாம் ஒன்றே.

உலக மொழிகள் பலவற்றுள் எழுத்து ஏற்படாத மொழி களும் உண்டு. எழுத்து ஏற்பட்டுச் சொல்லின் இலக்கண அமைப்புப் பெறாத மொழிகளும் உண்டு. ஆனால் தமிழ் மொழியோ எழுத்தும், சொல்லும் முறையாக அமைக்கப் பெற்று, அவற்றிற்கு இலக்கணமும் எழுதப்பெற்று இவைகளுக் கெல்லாம் மேலாகப் பொருளிலக்கணமும் பண்டே எழுதப் பெற்ற வனப்புடைய செம்மை மொழியாகவும் உள்ளது.

வனப்பினை,

"அம்மை, அழகு, தொன்மை, தோலே
விருந்தே, இயைபே, புலனே, இழைபு எனாஅப்
பொருந்தக் கூறிய எட்டு"

எனவரும் தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாவால் அறிக.

தமிழின் பழமை

அ. தொன்மைக் காலந் தனில்வாழ்ந்த
தொல்காப் பியனாம் பெரும்புலவன்
முன்னர் முந்து நூலுணர்ந்தே
மொழிந்தான் தமிழ்க்கு இலக்கணத்தை
என்னும் இதனால், தமிழ்ப்பழமை
எண்ணிப் பார்ப்பீர் நன்றாகத்;
தன்மை நிறைந்த தமிழ்ச்சிறப்புள்
தக்க சிறப்பாம் இச்சிறப்பே.

தொல்காப்பியனே தொன்மைக்காலத்தில் வாழ்ந்தவன். அவன், தான் எழுதிய இலக்கணங்கட்குச் சான்றாகக் கொண்ட முந்து நூல், அவனைவிடத் தொன்மை வாய்ந்தது. முந்து நூலுக்கு முன்னே பல இலக்கியங்கள் செய்யுள் வழக்கில் இருந்திருக்க வேண்டும். செய்யுள் வழக்கிற்கு முன் பேச்சு வழக்காகிய உலக வழக்கும் அமைந்திருக்க வேண்டும். இவற்றை எல்லாம் காரண காரிய முறையில் எண்ணிப் பார்த்துத் தமிழின் பழைமையை அறிஞர் உணர்க.

"எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி"

என்னும் தொல்காப்பியப் பாயிரத்தைக் கருதி எழுந்தது இச் செய்யுள் என்க.

தமிழ் என்னும் சொல்லிற்குள்ள பொருள்

கூ. எழுமை சான்ற பீங்கலந்தான்
இனிமை நேர்மை தமிழென்னும்
வழமை சான்ற மற்றொன்று
வழுத்தும் தமிழைச் சாயலென்றே
பழமை என்னும் பண்பன்றிப்
பகர்ந்த இவையும் உடையனவாய்
அழகு நிறைந்த தமிழுக்கே
அறைவர் பலவாம் பண்பினையே.

பீங்கலம் என்னும் தமிழ் நிகண்டு, "இனிமையும் நேர்மையும் தமிழெனலாகும்" என்று கூறும். இதனால் தமிழுக்கு இனிமை, நேர்மை என்கின்ற பொருள் இருத்தலை உணர்ந்து கொள்ளலாம். **சிந்தாமணி** என்னும் இலக்கியம் "தமிழ் தழீஇய சாயலவர்" (பாட்டு – 2026.) என்று கூறுவதால் தமிழ் என்னும் சொல்லிற்கு மென்மை என்று பொருள் இருத்தலையும் உணர்ந்து கொள்க.

எனவே தமிழ் இனிமை, நேர்மை, மென்மை என்னும் இவற்றினுடன் காலப்பழமையும் வாய்ந்தது என்க.

தமிழ் என்னும் சொல்லுக்குள்ள விளக்கத்தை 14–ஆம் பாட்டுக்குள்ள விளக்கத்தால் அறிக.

பீங்கல நிகண்டில், பத்தாவது ஒருசொல் பல்பொருள் வகையில், "இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்" (நூற்பா 580) என்ற நூற்பா வந்துள்ளது.

வழமை சான்ற மற்றொன்று என்றது, சீவக சிந்தா மணியை. அது சுரமஞ்சரியார் இலம்பகத்துள் பெண்

களைக் குறிப்பிடும் பொழுது, "தமிழ் தழீஇய சாயலவர்" (பாட்டு 2026) என்று கூறும். இனிமை தழுவிய சாயலை உடையவர் என்பது அதற்குப் பொருள்.

கூர்மபுராணம் 'தமிழினும் இனிய மென்மையவாகி, (வானவர் - 13) என்ற பகுதியில் தமிழுக்கு மென்மை கூறியுள்ளதையும் அறிக.

தமிழ்ப் பண்புகள் அறியுமிடம்

கo. அன்பீன்ஐந் திணைப்பாடல் அனைத்தின் கண்ணும்
அருமையுள தமிழ்இனிமை யாவும் காண்பேம்;
முன்புசெறி புறப்பொருளில் புறநா னூறில்
முதன்மைபெறு நேர்மையினை முற்றும் காண்பேம்;
மென்மைபெறும் எழுத்தாலே அமைவண் ணத்தில்
மென்மையுறும் நற்பண்பை மிகவே காண்பேம்;
நன்மைதரும் நாயன்மார் ஆழ்வார் பாட்டில்
நனிசிறந்த தெய்வநலம் நன்கு காண்பேம்.

தமிழ் மொழியே மென்மைப் பண்பு வாய்ந்தது. அதனுள் மெல்லெழுத்தால் வருகின்ற பாடலை மெல்லிசை வண்ணம் என்பர். அதனை தொல் – செய்யு 209 ஆவது நூற்பாவால் அறிக. திருக்குறள் புறப்பொருளும் அகப்பொருளும் அமைந்த இலக்கியமாதலின் அதன்கண் இனிமை, நேர்மை என்ற இரண்டையும் காணலாம். கடவுள் வாழ்த்தால் தெய்வ நலத்தையும் காணலாம்.

"நேர்சமம் ஈதல் பாதி நெடிலுடன் பாடு நுட்பம்"

(ரகர எதுகை 15) என்னும் சூடாமணி நிகண்டின்படி நேர்மை என்பதற்குப் பலபொருள் இருப்பினும் இங்கே ஈற்றில் கூறிய 'நுட்பம்' என்னும் பொருளே கொள்ளத்தக்கதாம். தொல்காப்பியர் தமிழை 'நுணங்கு மொழி' என்று கூறுவர். (நூல்என மொழிப 'நுணங்கு மொழிப்' புலவர், மரபியல் 100)

தொல்காப்பியம்

கக. பல்புகழ் நிறுத்த படிமையோன் என்று
பாயிரம் புகழ்ந்திடு கின்ற
தொல்புகழ்த் தொல்காப் பியனெனும் புலவன்
தோம்அற இலக்கணம் வகுத்த
நல்புகழ் பெற்ற நற்றமிழ் நூலை
நாட்டினில் கற்றவர் அறிவர்;
ஒல்புகழ் எழுத்துச் சொற்பொருள் என்னும்
உறுப்பினைப் பெற்றதப் பெரு நூல்

மேல் பாட்டுள் தோம்அற என்றதைத் தொல்காப்பியப் பாயிரத்துள் "அரில் தப" என்ற சொல்லுடன் ஒப்பிட்டு உணர்க. இங்கு நற்றமிழ்நூல், என்றது தொல் காப்பியத்தை.

இளம்பூரணர், சூத்திரம், ஓத்து, படலம் என்னும் மூன்று உறுப்புக்களையும் அடக்கிக்கொண்டு இருக்கும் பிண்டமாகிய பெருநூல் தொல்காப்பியம் என்பர். (தொல் – செய்யு – 165).

அன்றியே, நேமிநாதம் என்னும் இலக்கண நூலின் பாயிரமானது தொல்காப்பியத்தைத் "தொல்காப்பியக் கடல்" என்று கூறும்.

பல்புகழ் நிறுத்த படிமையோன், தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி, எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி புலம் தொகுத்தோன்" என்ற தொல்-பாயிரக் கருத்தை தழுவி எழுந்தது இப்பாடல் என்க.

தொல்காப்பியம் கற்றற்கு அரியநூல்

கூஉ. எழுத்திலக் கணத்தைச் சொல்லிலக் கணத்தை
ஈடிலாப் பொருளிலக் கணத்தைப்
பழுத்தநற் புலவர் பன்முறை பயின்று
பாங்கினில் உணர்ந்திட வேண்டும்;
வழுத்துபே ரறிவின் வளமிலார் என்றும்
வகைபெறக் கற்றிடக் கருதா
அழுத்துநல் அரிய பொருட்டிறம் பெற்றே
அழகுற விளங்கிடும் அந்நூல்.

பேரறிவின் வளம்பெற்றவரே தொல்காப்பியம் முழுமையும் கற்றற்கு உரியவர் ஆவார். அறிவின் வளமிலார் ''அதில் என்ன இருக்கின்றது, என்று கூறித் தங்கள் அறிய மாட்டாமையையமறைத்துக் கொள்ளவே முயல்வர்.

அழுத்து = ஆழ்ந்த.

தொல்காப்பியம் கூறும் பல பொருள்களில் சில பொருளைக் கூறுவேன்

கஉ. காட்டுறும் ஆடி போன்றநூற் பாவால்
கறையற அறிபொருள் கூறும்
தேட்டினை யுடைய தீந்தமிழ் நூலாம்
திருவளர் காப்பியம் தானே,
நாட்டினைப் பற்றி மொழியினைப் பற்றி
நாடவர் நன்கனம் உணரக்
கூட்டுற உரைக்கும் செய்திகள் பலவாம்;
கொண்டிடச் சிலபொருள் உரைப்பேன்.

'காட்டுறும் ஆடி, என்றது கண்ணாடியை. இலக்கண விதிகளைக் கூறுகின்ற ஒன்றையே நூல் என்று பண்டையோர் வழங்கி வந்தனர். இலக்கியங்களை நூல் என்று கூறும் வழக்கம் தொல்காப்பியர் காலத்தில் இல்லை. இலக்கண விதிகளை நூற்பா என்னும் சூத்திரத்தாலேயே கூறுவர். அதன் இலக்கணத்தை

அவற்றுள்
சூத்திரம் தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்து அமைப்பதுவே.
(தொல் – செய்யு – 162)

என்பதால் அறிக.

சில பொருள் என்றது, தமிழ் மொழியைப் பற்றிக் கூறும் சில செய்திகளை.

தொல்காப்பியம் தமிழ் என்னும் சொல்லையே
தமிழ் மொழிக்குப் பெயராக எடுத்துக் கூறும்

கச. தக்கநற் தமிழாம் தகைபெறும் சொல்லைத்
தழைக்குமெய் யீறென அமைத்தே
அக்கெனும் இனிய சாரியை அமைய
அழகுறப் புணர்ந்திடும் விதியை
மிக்கவ ரெல்லாம் அறிந்திட உரைத்தான்
மேவுறும் இவ்விதி யாலே
ஒக்கும் இப் பெயரே தமிழ்மொழிக் குரிய
உரைமுதற் பெயரென உணர்ந்தேம்.

தமிழ் மொழிக்குத் தமிழ் என்னும் சொல்லே முதற் பெயராகும். தமிழ் மொழியைக் குறித்து வழங்குவதற்குப் பல பெயர்கள் உள்ளன. அவற்றுள் தமிழ் என்னும் ஒரு பெயரே தமிழ்ச் சான்றோரால் அமைத்துக் கொள்ளப்பட்ட முதற் பெயராகும். பிங்கல நிகண்டு "இனிமையும் நேர்மையும் தமிழெனலாகும்" (பத்து ஒரு சொல் பல்பொருள் வகை) (நூற்பா–580) என்று கூறுவதைக் கருதினால் இனிமை, நீர்மை என்கின்ற இரண்டும்தமிழ் என்னும் சொல்லிற் குரிய பொருளாக அமையும். எனவே, தமிழ்மொழி இனிமை வாய்ந்தது, நேர்மை வாய்ந்தது என்க. இச்சிறந்த பொருள் பிறநாட்டு வரலாற்றறிஞர் கண்ணில் நன்றாகப் புலப்படுவதில்லை.

ழகர எழுத்தைப் பெறாத பிறமொழியாளர்கள் எல்லாம் இம் முதற் சொல்லைத் தமிள் என்றும், தமிளம் என்றும், திரமிளம் என்றும், திரவிடம் என்றும், திராவிடம் என்றும் பலவாறு திரித்து வழங்குகின்றனர். இச்சொற்களுள் 'திராவிடம்' என்ற வழக்கே அவர்களிடம் மிகுதியாக உள்ளது.

திராவிடம்

வடமொழியாளர் திராவிடம் என்னும் இச்சொல்லை மூன்றாம் தகரம், மூன்றாம் டகரத்தால் எழுதுகின்றனர். முதல் தகரத்தால், முதல் டகரத்தால் எழுதுவதில்லை. இதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்தால் தமிழ் மென்மையான மொழியாகையால் மெல்லோசையுடைய மூன்றாவது தகர, டகரங்களால் எழுதுகின்றனர். இதுவே அவர்கள் திரித்துக்கொண்ட திராவிடச் சொல்லுக்குக் காரண மாகும். தமிழ்என்ற சொல் திராவிடம் எனத்திரிந்தது என்பதை அறியாதவர், இதனை வடமொழிச் சொல்லாகவே கருதி 'த்ரு' என்னும் வேர்ச் சொல்லிலிருந்து உண்டானது என்று கூறிக் கொண்டு அச்சொல்லிற்குப் போரில் இருந்து தோற்றோடுதல் என்ற பொருள் அமரகோசத்தில் இருத்தலின் இது போரில் தோற்றோடிய தமிழரைக் குறிப்பதற்கு ஆரியர் வழங்கிய ஆரியச் சொல் என்பர். ஆனால், நான் சொல்வது தமிழ் என்கின்ற சொல்லை வடமொழியாளர் திரித்துக் கொண்ட திரிந்த தமிழ்ச்சொல்லே என்று கருதுகிறேன். இது தமிழ்ச் சொல் திரிந்து ஆரியத்தில் வழங்கும் சொல்லானால் அவர்கள் சொல்கின்ற ஓடிப் போதல் என்ற பொருள் இச்சொல்லிற்குப் பொருந்தாது. அவர் சொல்கின்ற ஓடிப் போதல் என்ற பொருள் திராவிடம் என்கின்ற சொல்லுக்குப் பொருந்தாதது ஆகும்.

தமிழ் அறிஞர் திராவிடம் என்ற சொல் மூன்றாம் தகரத்தால், மூன்றாம் டகரத்தால் அமைந்ததா? அல்லது முதல் தகர, டகரத்தால் அமைந்ததா? என்பதை ஆராய்ந்து துணிக.

முதல் தகர, டகரத்தால் அமைந்ததாயின் அதற்கு வேறு காரணமே கூறவேண்டும். நான் "திரி" என்கின்ற

வேர்ச் 'சொல்லிலிருந்து 'திராவிடம்' என்கின்ற சொல் தோன்றிற்று எனக் கருதுகிறேன் "திரி," என்பதற்கு மூன்று என்று பொருள் இருத்தலின் மூன்று பகுப்புடைய மொழி திராவிட மொழி என்க. அம் மூன்று பகுப்பு இயல், இசை, நாடகம் என்பனவாகும் எனவே, இச்சொல்லிற்கு இவ்வாறு காரணம் கூறி ஆராய்ந்தவர் எவருமில்லை.

முதல் தகர டகரத்தால் அமைந்த திராவிடம் என்ற சொல்லிற்கு மூன்றாம் தகரத்தால் அமைந்த 'த்ரு' என்கின்ற சொல் அடியாக அமையாது.

செந்தமிழ்

கஅ. பனம்பாரத் தமிழ்ப்புலவன் பாயிரத்தி னுள்ளே
பலர்புகழ்செந் தமிழ்ச்சொல்லைப் பகர்திறனை நோக்கின்
இனம்சாரும் இலக்கணநூல் விதிப்படியே அமைந்த
இன்தமிழே செந்தமிழாம் என்றுதெளி கின்றோம்;
கனம்சாரும் காப்பியத்துள் எச்சவியல் தன்னில்
கவின்செய்யுள் செயும்சொல்லைக் கருதிமொழி போழ்தில்
வனஞ்சாரும் இயற்சொல்லைச் செந்தமிழ்நிலத்து வழக்காய்
வகுத்துரைத்தான் வான்தமிழின் வகையறிந்த புலவன்.

தொல்காப்பியப் பாயிரத்துள் "செந்தமிழ் இயற்கைச் சிவணிய நிலத்தொடு முந்து நூல்" என்று கூறப்பட்டுள்ள தால் இலக்கண விதிப்படி அமைந்த தமிழ்ச் சொற்களே செந் தமிழ்ச் சொற்களாகும். செம்மை என்பது இலக்கண ஒழுங்கைக் குறிக்கும். செந்நிறத்தைக் குறிக்கவில்லை. "விஞ்சு நிறம் தோயாத செந்தமிழே" என்பது தமிழ் விடுதூது.

செய்யுள் ஈட்டச் சொல் நான்கில் முதற்கண் குறிக்கப் படும் இயற்சொல்லே செந்தமிழ்ச் சொல்லாம்.

இயற்சொல் தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி
தம் பொருள் வழாமை இசைக்கும் சொல்லே.
(எச்சவியல், நூற்பா உ)

என்பது தொல்காப்பியம்.

இயல் என்பது இலக்கண நெறியைக் குறிக்கும். செந்தமிழ் என்றதில் செம்மை என்பதும் இலக்கண விதியை. இலக்கண விதியால் அமைந்த செந்தமிழ்ச் சொல் எல்லாம் இயற்

சொல்லாம் என்க. திருவள்ளுவ மாலையில் வண்ணக்கன் சாத்தனார் என்னும் புலவர்.

"ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து இதனின் இது
சீரியதென்று ஒன்றைச் செப்பரிது"

என்ற வெண்பாவில் திருந்திய மொழியாகிய ஆரியத்தையும் திருந்திய மொழியாகிய செந்தமிழையும் ஒப்பிட்டுக் கூறியதை நோக்குக.

ஆரியம் — திருந்திய மொழி
செந்தமிழ் — திருந்திய மொழி

செந்தமிழும் கொடுந்தமிழும்

கசு. இயற்சொல்லைச் செந்தமிழென் றியம்பி விட்டால்
இதுஒழிந்த திரிதிசைச்சொல் வடசொல் எல்லாம்
அயற்சொல்லா? என்றவினா அணையும் அன்றே;
அதற்குவிடை காப்பியத்துள் அறைய வில்லை;
நயப்புடைய சிலம்பதுதான் தமிழாம் ஒன்றை
நண்ணும்இரு பிரிவாக நவிலும்; ஒன்று
பயப்புடைய செந்தமிழாம்; மற்றை ஒன்று
பான்மைமிகு கொடுந்தமிழாம்; பகுப்பை ஆய்க.

இயற்சொல் என்பது இயல் என்னும் இலக்கணம் அமைந்த செந்தமிழ்ச் சொல்லை என்க. திரிசொல் என்பது கற்றறிவில்லாத மக்கள் தமக்கு வேண்டியவாறு திரித்துக் கூறிய தமிழ்ச் சொல்லாகும். இதனை,

''மொழியியல் தோ் புலவரெலாம் மொழிகின்ற செந்தமிழும்
அழிவழக்கோர் திரிதமிழும் ஆகும் உன்றன் இருவடிவே''

என்னும் என் பாட்டை (சான்றாண்மை) நோக்குக.

திசைச்சொல் என்பது தமிழ்நாடு நீங்கிய பிறநாட்டினர் பேசும் வேற்றுமொழி என்க. நமக்கு ஆங்கில மொழி திசைச் சொல்லாகும்.

வடசொல் என்பது ஆரிய மொழியைத் திரித்துத் தமிழிலே வழங்குதல் ஆகும். செய்யுள் ஈட்டச்சொல் நான்குள் இயற் சொல், ஒழிய ஏனைய மூன்றும் திரிசொல் வகையுள் அடங்கும் என்க. இத்திரிசொல்லை, தமிழ்ச்சொல் திரிந்தது, திசைச் சொல் திரிந்தது வடசொல் திரிந்தது என மூன்று வகையாக

வழங்கலாம். இக்காரணத்தால் இயற்சொல் ஆகிய செந்தமிழ் தவிர ஏனைய மூன்று சொல்லும் கொடுந்தமிழ் ஆகும் என்க.

இங்கு நயப்புடைய சிலம்பு என்றது சிலப்பதிகாரத்தைக் குறிக்கும்.

சிலப்பதிகாரம் இறுதி நூற்கட்டுரை என்னும் பகுதியுள்

"குமரி வேங்கடங் குணகுட கடலா
மண்டிணி மருங்கிற் றண்டமிழ் வரைப்பிற்
செந்தமிழ் கொடுந்தமி ழென்றிரு பகுதியின்"

என்று வரும் இப்பகுதியை நோக்கினால், குமரி வேங்கடம் உள்ளிட்ட தமிழகத்துள் செந்தமிழ், கொடுந்தமிழ் என்று இரண்டு வகையான தமிழ் வழங்கிய செய்தியை நாம் தெரிந்து கொள்ளலாம்.

செந்தமிழ் கொடுந்தமிழ் என்றதற்குக் காரணம்

கள. முந்துநூல் விதிக்கமைய செம்மைப் பண்பு
முற்றியதைச் செந்தமிழாய் மொழிவோ மானால்,
முந்துநூல் விதியேற்கா மூன்று சொல்லை
மொழியலாம் கொடுந்தமிழாய் முன்னிப் பார்மின்;
இந்தவகை இயம்புகின்ற இயல்பை எண்ணில்
இனிமைமுதற் பண்பெல்லாம் இயைந்து நிற்கும்
செந்தமிழே சிறந்தமொழி ஆகும் கண்டீர்
சிறப்பில்லைக் கொடுந்தமிழ்க்குச் செப்பிக் காண்மின்.

மேற்பாட்டு, சிலப்பதிகாரம் கூறும் செந்தமிழ் கொடுந் தமிழ் என்ற இரு பகுப்பினை ஆய்க என்று கூறிற்று. இப்பாட்டு ஆய்ந்து முடிவினைக் கூறுகின்றது.

ஆராய்ச்சியின் முடிவு இலக்கண விதிப்படி அமைந்த தமிழ்ச் சொற்களாகிய இயற்சொல் எல்லாம் செந்தமிழ் ஆகும். அல்லாத திரிசொல்லும், தமிழில் வந்து வழங்கும் திசைச்சொல்லும், வடசொல்லும், கொடுந்தமிழ் ஆகும் என்க.

தமிழ்ச் செய்யுளில் நூல்வகைச் சொல்லும் வரும்

கஅ. செய்யுள்தமைச் செய்திடுங்கால் சிறப்பே பெற்ற
செந்தமிழால் செய்தலன்றிச், சிறப்பில் லாத
மையுடைய கொடுந்தமிழால் செய்தல் தம்மை
மறுத்துரைக்கும் கருத்தில்லை நூல்கள் தம்முள்;
மெய்மைபெறு தமிழகத்துள் வாழ்வோர் வாழ்வில்
மேவிநிற்கும் வழக்குமொழி யாத லாலே
நய்வுதரும் திரிசொல்லைத் திசைச்சொல் தம்மை
நாட்டில்வரும் வடசொல்லைக் கடிதல் இன்றே.

தமிழ்மொழி மக்களால் வழங்கப்படும் வழக்கு மொழியாக உள்ள காரணத்தால், அதனில் இயற்சொல்லேயன்றித் திரி சொல்லும், திசைச் சொல்லும், வடசொல்லும் வந்து வழங்கலாயின. அம்முன்று சொல்லும் கொடுந்தமிழாயினும் செறிவான பொருளுடன் விளங்குமாயின் அதுவும் கொள்ளப் படும்

"அறியாமை மிகுதியினால் பலர்தமிழை
அழிவுபட அறைந்தா ரேனும்
குறியாத அம்மொழியைக் கொடுந்தமிழாம்
எனக்குறித்துக் கொள்வர் மேலோர்;
மறியாமல் பிறமொழியைத் தமிழோடே
மிகமயக்கி மலைவே யின்றிச்
செறிவான பொருளுடனே சிலரெழுதும்
தமிழ் நடையும் சேர்க்கற் பாற்றே"

என்னும் என் பாட்டை நோக்குக.

பாடலில் ''வழக்குமொழி ஆதலாலே'' என்பதற்கு வழக்கு மொழி தமிழ் ஆதலால் என்று பொருள் கொள்க. தமிழ் வழக்கு மொழியாக இருத்தலினால் திரி சொல்லையும் திசைச் சொல்லையும் வடசொல்லையும் களையாமல் கொள்ள வேண்டியுள்ளது என்க.

தொல்காப்பியர் கூறும் தமிழைக் குறித்த பிறபெயர்கள்

ககக. வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பாம்
வளர்பெரு நாட்டது மொழியாம்
பண்புள தமிழ்க்கு இலக்கணம் பகர்ந்த
பழையதொல் காப்பிய நூல்தான்
ஒண்பொருள் வாயே, தொன்மொழி என்றும்
உயர்மொழி நுண்மொழி என்றும்
நண்புறத் தோன்றும் புலன்மொழி என்றும்
நவின்றிடும் தமிழ்மொழி தனையே.

புகழையுடைய சேர, சோழ, பாண்டியர் என்னும் மூன்று அரசர்க்குள்ள நாட்டிற்கு உரிய பெருமொழியாய் விளங்குவது தமிழ்மொழியாகும். அத்தமிழ் மொழிக்கு இலக்கணம் கூற எழுந்தது தொல்காப்பியமாகும். அத்தொல் காப்பியம் தமிழ் மொழியை, வாய்மொழி, தொன்மொழி, உயர்மொழி, நுண்மொழி, தோன்றும் மொழி. புலன்மொழி என்று கூறி அம்மொழியின் இயல்பைப் புலப்படுத்தியுள்ளது. இதனை அறிஞர் ஆராய்ந்து பாப்பாராக. அவற்றைக் கீழ்வரும் நூற்பாவால் அறிக.

நிரைஅவண் நிற்பின் நேரும் நேர்பும்
வரைவு இன்று என்ப வாய்மொழிப் புலவர்

[செய்யுளியல்–71]

இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும்
தோல் என மொழிப தொல்மொழிப் புலவர்

[செய்யு–230]

நோ்இன மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓர் இனப் பொருளை ஒருவழி வைப்பது
ஓத்து என மொழிப உயர்மொழிப் புலவர் [செய்யு-163]

ஒத்த சூத்திரம் உரைப்பின் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகையது ஆகி
ஈர்ஐங் குற்றமும் இன்றி நேரிதின்
முப்பத் திருவகை உத்தியொடு புணரின்
நூல்என மொழிப நுணங்குமொழிப் புலவர் [மரபு-100]

ழுன்றுஉறுப்பு அடங்கிய தன்மைத்து ஆயின்
தோன்றுமொழிப் புலவர் அது பிண்டம் என்ப [செய்யு-165]

சேரி மொழியான் செவ்விதின் கிளந்து
தேர்தல் வேண்டாது, குறித்தது தோன்றின்,
புலன்என மொழிப புலன்உணர்ந் தோரே [செய்யு-233]

அறிஞர் கருத்துக: தொல்காப்பியர் தமிழ்மொழி என்று குறிக்க வேண்டிய இடத்தில் அதன் மாற்றுப் பெயராக வாய்மொழி, தொன்மொழி, உயர்மொழி, நுண்மொழி, தோன்றும் மொழி, புலன் மொழி, என்று குறிக்கின்றார். இவ்வாறு கூறும் இம்மொழிகளின் பொருளைத் தமிழறிஞர் ஆராய்ந்து தமிழின் சிறப்பினை உணர்க. தோன்றும் மொழி என்றால் புதுமொழி என்று பொருள். இவ்வாறே மற்றவற்றின் பொருளையும் அறிக.

தமிழ் கூறும் நல்லுலகத்துள் தமிழ்நாடு

உ0. வேங்கடம் குமரி நாப்பண் விளங்கும்
பெருநிலப் பரப்பினைத் தமிழகம் என்பர்;
இதனை,
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பாம்
தமிழ்கூறும் நல்ல உலகம் என்றே
தொல்காப் பியமெனும் தொன்னூல் கூறும்,
தமிழ்கூறும் உலகை ஆண்ட மூவருள்
சேர மன்னனைப் பூழியன் என்றும்
பாண்டிய மன்னனைச் செழியன் என்றும்
வளவன் தன்னைச் சோழன் என்றும்
தமிழின் ழகர எழுத்துப்பெறக் கூறலின்,
மூவரும் தமிழக அரசர் என்றே
முன்னிக் கூற முடிந்தது ஆயினும்,
திவாகரம் என்னும் தெளிதமிழ் நிகண்டு
தமிழ்நாடன் என்னும் தக்க பெயரைப்
பாண்டியன் பெயராய்ப் பகர்தலின், கூடல்
பாண்டியர் ஆண்ட பைந்தமிழ் நாட்டைத்
''தமிழ்கூறு நல்லுலகத்துள் தகைபெற வளர்த்தலின்.
தமிழ்நாடு'' என்றே கருதுவம்
தமிழ்ச் சங்கம் இருந்து தமிழை வளர்த்தலின்.

தமிழ் கூறும் நல்லுலகத்திற்குத் தமிழகம் என்று ஒரு பெயர் உண்டு, என்பதை "வையக வரைப்பின் தமிழகம்" (168-18) என்னும் புறநானூற்று அடியால் காண்க.

அத்தமிழகத்தை மூன்று தமிழ் அரசர்கள் ஆண்டு வந்தனர் என்பதை

மண்திணி கிடக்கைத் தண் தமிழ்க் கிழவர்
முரசுமுழங்கு தானை மூவர் உள்ளும்" (35-3-4)

என்னும் புறநானூற்றால் அறிக.

தமிழ் கூறும் நல் உலகத்துள் உள்ள பாண்டிய நாட்டுள் தமிழ்ச் சங்கம் இருந்து சிறப்பித்தது என்பதைக் கீழ்வரும் பாட்டால் அறிக.

"ஆவியந் தென்றல் வெற்பின் அகத்தியன் விரும்புந் தென்பால்
நாவலந் தீவம் போற்றி, நாவலந் தீவந் தன்னுண்
மூவர்கட் கரியா னிற்ப முத்தமிழ்ச் சங்கத் தெய்வப்
பாவலர் வீற்றி ருக்கும் பாண்டிநன் னாடு போற்றி"

(வேம்பத்தூரார் – திருவிளையாடற் புராணம்) இப்பாட்டுள், தென்பால் நாவலந்தீவு என்றது தமிழகத்தை. மேற்பாட்டில் தமிழ் கூறு நல்லுலகத்தையும் அதனுள் அமைந்த பாண்டிய நாட்டையும் பிரித்துக் கூறிய கருத்தை உணர்க.

முத்தமிழ்

"முகமும் விழியும் கரு மணியும் போன்ற முத்தமிழ்க் கூறுகள்"

உக. இயலிசை நாடகம் எனும் பெயர் பெற்று
மூன்று பகுப்பாய் முத்தமிழ் விளங்கும்;
அவற்றுள்,
ஆசிரியம் முதலா நான்கு பாவினுள்
அறமுதற் பொருளை அமையப் பாவி
மோனை முதலாம் தொடையழகு தோன்ற
அணிபெறப் பாடுதல் இயற்றமிழ் ஆகும்;
இ:.து,
அறிவிற்கு விருந்தாய் அமையும் என்க;
பாவினம் என்றும் பண்ணத்தி என்றும்
செந்துறை என்றும் செப்பும் பாட்டில்
அறமுதற் பொருளை அமையப் பொருத்திப்
பண்களை அமைத்துப் பாடுதல் தானே
இசைத்தமிழ் என்னும் இன்தமிழ் ஆகும்;
இத்தமிழ்;
அறிவிற்கும் செவிக்கும் விருந்தா கும்மே;
நடித்தலுக் கேற்ற வெண்துறைப் பாட்டில்
அறமுத லாகிய பொருள்வகை அமைவரப்
பாடி ஆடுதல் நாடகத் தமிழாம்;
இத்தமிழ்;
அறிவிற்கும், செவிக்கும் விழிக்கும் விருந்தாம்.
மூன்று தமிழ்க்கும் மெய்ப்பாடு வேண்டும்.

இயற்றமிழ் என்றது இசையும், நாடகமும் கலவாத தமிழ் என்க.

தமிழிசை பாடுவோர் சீர்என்னும் தாளத்திற்குத் தமிழ் அசைகளையே அடியாகக் கொள்ள வேண்டும். வடமொழி லகு குருக்களை அடியாகக் கொள்ளலாகாது என்பதைக் கூறுதல்.

உஉ. சீர்என்னும் தாளவொற்றைச் சிறப்பயகத்
தமிழ்அசைகள் அசைத்தே நிற்கும்
நேர்மன்ன லகுகுருக்கள் நிகழ்வுபெற
அசைக்காதே நிகழ்த்திக் காண்மின்;
பாரதனில் நேர்நிரையாய்ப் பகர்கின்ற
தமிழசையின் பரிசு வேறாம்;
ஈரியல்பாம் லகுகுருக்கள் இவற்றினொடு
பொருந்தாவே; இயல்பால் வேறாம்.

அசை என்பது தாளத்தின் உட்கூறு. சீர் என்பது தாள முடிவு. தாளத்தின் உட்கூறாகிய அசை நேரசை என்றும், நிரையசை என்றும் இரண்டு பிரிவாக இருக்கும். குறில் தனித்து வரினும், அ∴து ஒற்றடுத்து வரினும், நெடில் தனித்து வரினும், அ∴து ஒற்றடுத்து வரினும் நேரசையாகும். இதனைத் தனி அசை என்று கூறுவர்.

குறிலும் குறிலும் இணைந்து வரினும். அ∴து ஒற்றடுத்து வரினும், குறிலும் நெடிலும் இணைந்து வரினும், அ∴து ஒற்றடுத்து வரினும் நிரையசையாகும். இதனை இணைஅசை என்று வழங்குவர்.

இந்த அசைப் பிரிவுகளை நோக்கியே தாளம் எழும் என்க. வடமொழியாளர் பாட்டினைச் சந்தஸ் என்பர். அது லகு, குருக்கள் பற்றியும், கணங்கள் பற்றியும், பாதம் பற்றியும் எழும் என்க. சூரியநாராயண சாஸ்திரியார் லகு,

குரு, கண, பத, விருத்தம் என்று வடமொழிப் பாட்டினைக் குறிப்பிடுவர்.

குறில் மட்டும் தனித்து வருவது லகுவாகும். அக்குறில் ஒற்றடுத்து வரினும், நெடில் தனித்து வரினும், அந்நெடில் ஒற்றடுத்து வரினும் இம்மூவகை ஓசையும் குரு என்றே கொள்ளப்படும். மேலே கூறிய லகு குரு அமைப்பு முறைகளைப் பார்த்தால் தமிழிலுள்ள நேரசை நான்கே, லகு, குரு என இரண்டாக வரும் எனப் புலப்படும். வடமொழியாளர் கூறும் முறைப்படி தமிழ்நான்கு நிரையசைகளும் முறையே லகுவும் லகுவும், லகுவும் குருவும், லகுவும் குருவும், லகுவும், குருவும் ஆக வரும். எடுத்துக்காட்டு. வெறி, நிறம், சுறா, விளாம் என்பனவாம். மேற்கூறியவற்றால் தமிழ்ப் பாடல் அமைப்புகளும், வடமொழி அமைப்புகளும் வேறுபாடுடையன என்பதை அறிந்து தமிழ் இசை அறிஞர்கள் பாடல்களைப் பாடவேண்டும்

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையுள், "ஆடல் பாடல் இசையே தமிழே" (அடி 45) என்ற பகுதியில், "தமிழென்றது, வடவெழுத்தொரீஇ வந்த எழுத்தானே உறழ்ந்து கட்டப்பட்ட வாக்கியக் கூறுகளும், இயலிசை நாடகமென்று சொல்லப்பட்ட மூவகைத் தமிழ்களும்" என்னும் அடியார்க்கு நல்லார் உரையைக் காண்க.

தமிழ்த் தொண்டு

தொண்டு இரண்டே

உரு. செய்வனவும் தவிர்வனவும்
எனஇரண்டாம் தொண்டே;
சிறப்பாக நலம்கிடைத்தால்
செய்வனவே ஆகும்;
நய்வுதரும் தீமைவரின்
தவிர்வனவே ஆகும்;
நலந்தீங்கை நன்கறிந்து
நற்றொண்டைப் புரிவீர்.

தமிழ் நாட்டுக் குடிமக்கள் இருவகையினர்.

உ சா. பழங்குடிகள் வங்குடிகள் என்றிரண்டு பகுப்பாய்ப்
பகுக்கலாம் குடிகள்தமைப் பகுக்கும்வகை யாலே
கிழங்கதெனப் பண்டுதொட்டே வாழ்ந்திடுவோர் குடியே
கீழமையுள பழங்குடியாம்; கீழமையது வின்றி
வழங்குகிற இயல்பாலே வந்திடுவோர் குடியே
வங்குடியாம்; இருவரியல் வாய்மையுறக் காண்மின்
தழங்குகிற தமிழ்நாட்டில் இருவகையர் தாமும்
தங்கலால் தமிழ்நாட்டுக் குடியினர் ஆவாரே.

தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு வாழ்பவரெல்லாம் தமிழ் நாட்டுப்பழங்குடியினர் ஆவர். அவவாறின்றித் தமிழ் நாட்டுக்கு வந்து குடியேறிய பிறநாட்டு மக்களெல்லாம் வங்குடியினர் ஆவர். வந்த குடி என்னும் சொல்- வங்குடி என மருவிற்று.

இருவருக்குமுள்ள வேறுபாடாவன:-

தமிழால் எண்ணித் தமிழால் பேசித்தமிழால் எழுதுபவர் பழங்குடியினர் ஆவார். அவ்வாறின்றித் தங்கள் மொழி யினால் எண்ணித் தமிழால் பேசி, தமிழால் எழுதுபவர் வங்குடியினர் ஆவர். எனவே தமிழ்நாட்டுப் பழங்குடியினர் அடி உள்ளத்துள் தமிழே வாழ்ந்திருக்கும். வங்குடியினர் அடி உள்ளத்துள் பிறமொழியே வாழ்ந்திருக்கும் என்க.

இருவரும் தமிழ்நாட்டுள் வாழ்தலால் தமிழ்க்குடியினரே ஆவார்.

வங்குடிகளுக்கு வேண்டுகோள்.

உரு. வங்குடியாய் வாழ்வதற்கு வந்தோர் தம்முள்
வாய்மைநிறை போப்பையர் முதலாய் உள்ளோர்
கங்குகரை இல்லாமல் தமிழ்மொழியைக் கற்றும்
கணக்கில்லாத் தொண்டுகளைத் தமிழ்மொழிக்குச் செய்தார்;
இங்கிவரைப் போற்றுகின்றோம்; இம்மக்கள் போல
ஏற்றமுள வங்குடியாய் வாழ்ந்திடுவோர் எல்லாம்
தங்களுடை மொழிபோலத் தமிழ்மொழியைப் போற்றின்
தமிழ்மொழிதான் தழைத்திருக்கும் தக்கமுறை ஆமே.

"தக்கமுறை ஆமே" என்றது தமிழ் நாட்டுள் வாழ்ந் திருக்கும் வங்குடியினர் எல்லாம் போப்பையர் முதலான வங்குடியினரைப் போல தமிழுக்குத் தொண்டு செய்தலே தக்கமுறை ஆகும். அவ்வாறின்றித் தங்கள் மொழிப் பற்றால் தமிழ் வளர்ச்சிக்குத் தீங்கு செய்தல் தக்க முறை ஆகாது என்க.

பிறமொழியைத் தாய்மொழியாகப் பெற்றுள்ள தமிழ் நாட்டு வங்குடியினர் அடி உள்ளத்தே பிறமொழியாகிய அவர்தம் மொழியே தங்கி உள்ளதால் அவர் பேசும் தமிழ் மொழி தக்க சிறப்பைப் பெற்றிராது. அ.:தேபோல் தமிழ் நாட்டுள் வாழும் பார்ப்பனர் அடி உள்ளத்துள் ஆரிய மொழியாகிய கிரந்தமே தங்கி இருத்தலால் அவர் தமிழ் மொழியை நன்றாகப் பேச அறியார். தமிழராகிய வெள்ளான் களின் அடி உள்ளத்துள் தமிழே தங்கியிருத்தலால் ஆரிய மொழியாகிய கிரந்த மொழியை அவர் நன்றாகப் பேச அறியார்.

இது பற்றியே நாட்டில்

"வெள்ளான் கிரந்தமும் பார்ப்பான் தமிழும்
விழல்வீழலே" என்ற ஒரு பழமொழி வழங்குகின்றது.

அரசியலில் மொழி

26-38

உசு. ஆற்றல்மிகு தமிழரசர் அரசாண்ட
காலத்தே அரசர் வாயில்
ஏற்றமிகு குடிமக்கள் வாயதனில்
தமிழ்மொழியே இருந்த தாகும்;
வேற்றரசர் தமிழ்நாடு புகுந்ததால்
அந்நிலைமை வேறே ஆகி
மாற்றுமொழி ஆயிற்றே மக்களுடன்
அரசிடத்தும் மயக்கம் தோன்ற.

பண்டு தமிழகத்தைத் தமிழரசர் அரசாண்ட காலத்தே அரசர் வாயிலும் குடிமக்கள் வாயிலும் தமிழ்மொழியே தங்கி இருந்தது. பின் வேற்றுநாட்டவர் ஆளத் தொடங்கிய காலத்திலிருந்து அரசர் வாயில் வேற்றுமொழியும், தமிழ்மக்கள் வாயில் தமிழ்மொழியுமாக வேறுபாடு உண்டாகிவிட்டது.

பல்லவர்காலத்தே ஆரியமொழியும், முகமதியர் காலத்தே அரபுமொழியும், ஆங்கிலேயர் காலத்தே ஆங்கிலமொழியுமாக அரசியலில் மொழிவேறுபட்டன. ஆங்கிலமொழி நன்கு அரசியலில் இவ்வாறு ஊன்றிவிட்டது.

மக்கள் ஆட்சியில்

அரசியலிலும் மக்களிடத்தும் ஒரே மொழி வேண்டும்.

உ.எ. மக்கள்தரும் உரிமைபெற்றே அரசாளும்
அரசியலில் மக்கள் ளோடே
தக்கஅர சியல்தானும் மொழியினால்
ஒன்றுபடல் தகுதி ஆமே
மிக்கமண வாழ்க்கைதனை மேவுவோர்
மொழிவேறு பட்டாற் போலப்
புக்குநிற்கும் மக்களுடன் அரசியலின்
மொழிமாற்றம் பொருந்தா தாகும்.

குடும்பம் நடத்தும் மணமக்களுக்கு இருக்க வேண்டிய ஒப்புமை பத்து ஆகும். அப்பத்தினை.

"பிறப்பே, குடிமை, ஆண்மை. ஆண்டொடு
உருவு, நிறுத்த காம வாயில்,
நிறையே, அருளே, உணர்வொடு திருஎன
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

(தொல்– மெய்ப்பாடு–25)

என்னும் நூற்பாவால் அறிக. அப்பத்துள் உணர்வு என்பது ஒன்றாகும். அவ்வுணர்வை உணர்ந்து கொள்ளுவதற்கு அவர்கள் பேசும்மொழி கருவியாகும் என்க. அம்மொழி இருவர்க்கும் ஒன்றாய் அமைதலே நன்றாகும். மாறுபடின் ஒருவர் உணர்வை மற்றொருவர் உணர்ந்து கொள்வதற்குத் தடை உண்டாகும் என்க. அதனைப்போல மக்கள் ஆட்சி முறையில் மக்களும், அரசும் ஒருமொழி பேசுபவராகவே அமைதல் வேண்டும் என்க.

குறிப்பு: மக்க ளோடே என்பது மக்கள் ளோடே என வந்தது செய்யுள் விகாரம்.

உ அ. நாடுரிமை பெற்றவன்றே மொழிஉரிமை

நண்ணுமென நம்பி நின்றோம்,
ஏடளவில் மொழிஉரிமை எழுதப்பட்
டதுவன்றி எதுவும் காணோம்;
கேடுதரு பிறராட்சி நாட்டைவிட்டுக்
கிளம்பிடினும் கிளம்பா தாகிப்
பீடுபெற அயல்மொழிதான் பெருகிநிற்கத்
தமிழ்தேய்தல் பெருமை அன்றே.

தமிழ்நாடு உரிமை பெற்றபின் ஆங்கிலமொழியே பெருகித் தமிழ் தேய்ந்து வருதலையே காண்கின்றோம். உரிமை பெற்ற தமிழக ஆட்சியாளரிடத்தே இதனை மாற்றும் ஆட்சித்திறன் வேண்டும்.

பிறமொழி கற்றலின் பழிச்சொல்

உகூ. நாட்டுமொழி கற்காமல் நல்லதெனப்
பிறர்மொழியை நாடிக் கற்றே
மோட்டளவில் அரசியலின் முடிமீது
வாழ்பவர்தாம், முற்றும் மாறாய்
நாட்டுமொழி வழக்கதனை நல்லரசில்
நாட்டாமல் நாளும் நாளும்
பாட்டுடைய பிறமொழியாம் பரத்தைக்கே
துணையாகிப் பழிசெய் கின்றார்.

தமிழ்மொழி ஆகிய உரிமை மகளொடு ஒருநாளும் பழகாமல், பிறமொழியாகிய பரத்தையொடு இளமைக் காலந் தொட்டே பழகி வாழ்ந்திருப்பவர் அரசியலாகிய வீட்டில் அப்பரத்தைக்கே உரிமை தரத் துணை செய்கின்றார். இது என்ன முறை என்றது.

கo 'தமிழ்நாட்டுக் கோயில்களில் வடமொழிக்கே
தலைமையெனும் தவறைப் போலத்,
தமிழ்நாட்டின் அரசியலில் அயல்மொழிக்கே
தலைமையெனும் தவறும் ஆயின்,
உமிழ்நாட்டும் அயலாட்சி ஒழிந்துவிட்ட
காலத்தும் ஒழியா தாகித்
தமிழ்நாட்டின் அரசியலில் அயல்மொழியே
தலைமைபெறல் தகுதி ஆமோ?

தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழ்மொழியே தலைமைபெறல் வேண்டும். அ:தேபோல் தமிழ்நாட்டு அரசியலிலும் தமிழ் மொழியே தலைமை பெறல் வேண்டும் என்பது கருத்து.

நம்பியாண்டார் நம்பி என்பார் திருஞான சம்பந்தரை

ஆறதேறும் சடையான் அருள்மேவ அவனியற்கு
வீறதே றும் தமிழால் வழிசெய்தவன்

[சண்பை விருத்தம்]

என்று சிறப்பித்து ஓதுதலால் இப்பாடல் பொருளைக் கருதின் தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் தமிழ்த் திருமுறைகளால் வழிபாடு செய்தலே தக்கதாம்.

தமிழ்நாட்டில் சைவவைணவத் திருக்கோயில் தவிர ஏனைய கோயில்களில் இன்றும் தமிழிலேயே வழிபாடு நடைபெறுகின்றது என்பது கருதத்தக்கது.

ஆங்கில மொழியையே தமிழன் விரும்புவானானால் தமிழ்மொழிக்கு ஆக்கம் உண்டா?

நக. ஆங்கிலத்தைக் கற்றுக்கொள் அதுவே போதும்
அரிதான தமிழ்நூலைத் தொடவே வேண்டாம்;
ஆங்கிலத்தால் தமிழ்நூலைக் கற்க வேண்டும்
அந்நூலின் மொழிபெயர்ப்பே அதற்குப் போதும்
ஆங்கிலத்தால் தமிழ்மன்றில் பேசல் வேண்டும்;
''ஆரியத்தால் தமிழருக்குச் சடங்கே போல''
ஆங்கிலத்தால் அரசாள வேண்டும் என்றே
அறைபவரும் தமிழரெனில் தமிழ்க்கோ ஆக்கம்¿

தமிழ்நாட்டில் இருந்தும் தமிழைக் கற்காமல் ஆங்கிலத்தையே கற்பவர்க்குக் கூறுதல்

நக. ஆங்கிலத்தைக் கற்றக்கால் அரசியலில்
வேலையெனும் அந்த ஒன்றால்
பாங்குபெறு தமிழைவிட்டுப் படிப்பெல்லாம்
ஆங்கிலமாய்ப் பழகி நிற்போர்,
ஓங்குபெரு வாழ்வெல்லாம் ஆங்கிலநா
டதன்கண்ணே உறுதல் நன்றே!
தாங்குகிற தமிழ்நாட்டில் தமிழ்பேசும்
தமிழருடன் தங்கல் நன்றோ?

அரசாங்க வேலை பெறுவதற்காக ஆங்கிலத்தைக் கற்பது தன்னலத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். தமிழ் மொழியில் பற்று வைத்தல் பொது நலத்தை அடியாகக் கொண்டதாகும். ஆங்கிலப் பற்றையே கொண்டு ஆங்கிலமே கற்போர் தமிழ்நாட்டில் தமிழ்மக்களுடன் இருந்து, தமிழ் நாட்டுப் பொருள்களையும், தண்ணீரையும் உண்டு உயிர் வாழ்தல் அவர்களுக்கு இழிவு தரும் என்க.

தமிழக அரசுக்கும் வேண்டுகோள்

கஉ. தமிழ்நாட்டில் தமிழ்மக்கள் உரிமையினால்
தந்ததமிழ் அரசிற் குள்ள
அமிழ்தான கடமையொன்று உளதேகாண்
அதுதமிழ்க்கே ஆக்கம் செய்தல்;
தமிழ்நாட்டில் ஆங்கிலமே கற்றோர்க்கு
வேலையில்லைத் தகுதி ஆக
அமிழ்தான தமிழ்தன்னை மிகக்கற்றால்
வேலையெனல் ஆக்கல் நன்றே.

தமிழக அரசில் ஆங்கிலத்தையே கற்றோர்க்கு வேலை கொடுக்கக் கூடாது. நாட்டு மொழியாகிய தமிழை நன்றாகப் பல துறையிலும் கற்றோர்க்கே வேலை தரல் வேண்டும், என்னும் இவ்விதியைத் தமிழக அரசு விதிக்க வேண்டும். இதுவே அரசியலின் முதல் வேலை.

ஆங்கிலேயர்களை விரட்டிவிட்டு அவர்களுடைய மொழியை மட்டும் வைத்துக் கொண்டு தமிழைப் புறக்கணித்தல் அறிவுடைமையாகாது

நகை. வெள்ளையனே வெளியேபோ
எனவிரட்டி அகற்றிவிட்டே
வெள்ளையர்தம் மொழியதனை
விரும்பீஅர சினில்வைத்தே
ஒள்ளியநற் றமிழ்தம்மை
உணர்வின்றிப் புறக்கணித்தல்
எள்ளுதற்கே உரித்தான
அடிமைநிறை இழிசெயலே.

ஆங்கிலமொழி சிறந்ததானால் அதற்குரிய ஆங்கிலேயரை அகற்றாமல் வைத்துக் கொள்வது சிறப்பினும் சிறப்பாகும் அல்லவா?

அவர் இருப்பது சிறப்பில்லையாயின் அவர்மொழி இங்கிருப்பதும் சிறப்பில்லை என்க.

முயற்சியுள்ள தமிழர் நுண்தமிழாலே கலைச்
சொற்களை ஆக்கிக் கொண்டு அவற்றால்
பயன்தரும் படைப்பைத் தமிழில் ஆக்குவார்

க.சு. தெண்ணீரில் அட்டதனால் சுவையிழந்த
கூழெனினும் தெரிந்து கொள்ளின்
ஒண்ணீர்மை அமிழ்தினிலும் உயர்ந்ததாய்
உணும்தமிழர், உயர்ந்த தான
நுண்ணீர்மைத் தமிழொன்றால் நுண்கலைச்சொல்
பலஅமைத்து நுணுகி ஆய்ந்து
பண்ணீர்மைப் பயன்பொருள்கள் படைப்பாரே
பிறர்மொழியின் படைப்பைப் பாரார்.

கம்பு முதலானவற்றைக் கூழ்சமைப்பவர் காடிநீர் என்னும் நீராகாரத்தால் உலைவைத்தே சமைப்பர். காடிநீர் அரிசிக் கஞ்சியால் ஆக்கப்படுவதாம். அது பெறாத சிலர் அயல் வீட்டில் அதனை வாங்கி உலை வைப்பர். பக்கத்து வீட்டில் அதனை வாங்க விரும்பாதவர் தண்ணீரில் உலை வைத்தே அதனைச் சமைப்பர். ஆனால் அது சுவையாக இராது. இருப்பினும் பிறர் உதவி இன்றித் தம் முயற்சியால் சமைத்த கூழ் ஆதலின் அதனை மிக இனிதாகவே கருதி உண்பர். அ:தே போல் பிறர்மொழியால் அமைந்த கலைப் படைப்புச்சொற்களை விரும்பாமல், முயற்சி உடைய தமிழறிஞர் தம் நுண்மொழியால் கலைப்படைப்புச் சொற்களைத் தாமே படைத்து அவற்றைப் பயன்படுத்திக் கொள்வர்.

இப்பாட்டு ‘‘தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் [1065] என்ற குறட்பாக் கருத்தைத் தழுவி எழுந்தது. தமிழுக்கு ‘நுண்மொழி’என்ற பெயருண்டு.

அடிமை நாட்டு மொழியும் உரிமை நாட்டு மொழியும்

நகு. அடிமை நாட்டில் அயல்மொழிதான்
ஆக்கத் துடனே அரசாளும்
அடிமை ஒழிந்த உயர்நாட்டில்
அந்த நிலைமை அமையாதே;
மடிமை இல்லாத் தமிழ்ப் பெரியீர்!
மாண்பார் உரிமைத் தமிழ்நாட்டின்
முடியில் இருந்து முதன்மைபெற
முன்னித் தமிழ்க்கே உழைப்பீரே.

அயல்மொழி, என்பது அடிமைப் படுத்தியவர்க்கு உள்ள மொழி என்க. அயலவர் ஆட்சியினாலே தலைமை இழந்து போன தமிழை மீண்டும் தலைமையாக்கி அது வளர வேண்டிய தற்குள்ள மற்றைய தொண்டுகளையும் புரிதல் முயற்சி உடைய போறிஞர்களாலேயே முடியும்.

உரிமை பெற்ற தமிழ்நாட்டில், அடிமை ஆக்கினோர் மொழிக்கு முன்னுரிமை இருக்கக் கூடாது

நகூ. அடிமை நாட்டில் அரசாளும்
அயலார் தம்பால் நலம்பெறற்கு
மடிமை இன்றி அவர்மொழியை
மதித்துக் கற்பார் அடிமைபெற்றோர்
அடிமை அழிய உரிமைபெற்ற
அறிவார் இந்தக் காலத்தும்
கெடுமை விளைய அடிமைதந்த
கிறியோர் மொழிக்கோ முன்னுரிமை?

கிறி என்றது வஞ்சகத்தை. கிறியுடையோர் என்பது அக்காலத்தில் வஞ்சகச் செயல் பல புரிந்து நம் நாட்டைப் பிடித்துக்கொண்ட ஆங்கிலேயர் முதலானவர்களைக் குறிக்கும். ஆங்கிலேயர் அன்று நம் நாட்டைப் பிடித்து அடிமையாக்கச் செய்த வஞ்சகச் செயல் பலவாகும். ஆங்கிலத்தை நினைக்கும் போதே அம்மொழிக்கு உரியவர்களான கிறியோர் நினைவே நமக்கு வரும். அடிமை பெற்றோர் என்பது அடிமை நாட்டில் வாழ்பவரைக் குறிக்கும்.

அடிமை பெற்ற அவர் தம்மை ஆள்வோரிடத்திலிருந்து தாம் நலம் பெறுதற்காக அவர் மொழியையே விரும்பிக் கற்பர். ஆனால் உரிமை பெற்ற நாட்டில் அவர் மொழி வாழ்வதற்கு உரிமையில்லை.

மெள்ள மெள்ள ஆங்கிலத்தை விலக்குதல் வேண்டும்

நா.எ. வெள்ளையர்தாம் தமிழ்நாட்டை வெகுநாட்கள்
அரசாண்ட விளைவி னாலே
அள்ளியஅக் காலத்தே ஆங்கிலமே
அரசியலின் அடியா யிற்றே!
ஒள்ளியநீர் உரிமைபெற்ற இக்காலம்
அந்நிலைக்கண் என்னே செய்வீர்?
மெள்ளமெள்ள அம்மொழியை மேவாமல்
விலக்குதலே மேன்மை ஆமே.

அடிமை பெற்ற காலத்தே அடிமையின் அடையாளமாக நமக்குக் கிடைத்த ஆங்கில மொழியை உரிமை பெற்ற இக்காலத்தே மெல்ல மெல்ல நீக்கி உரிமைச் சின்னமாகத் தமிழ்நாட்டில் தமிழை வளர்க்க வேண்டும்.

உரிமை உணர்ச்சி உடையோர் தம் தமிழ் மொழியை விரும்பி நன்கு கற்பர். அடிமை உணர்ச்சியுடையோர் பிறர்மொழியாகிய ஆங்கிலத்தையே விரும்பிக் கற்பர்

நஅ. தம்மனையுள் வாழ்ந்திருந்து தமதுபொருள்
பகுத்துண்ணும் தகுதி பெற்றோர்
அம்மையெனும் தம்தமிழை ஆர்வமுடன்
கற்றிருக்க அகங்கொள் வாரே;
இம்மையிலே பிறர்வீட்டில் பிறர்உழைப்பில்
இருந்துண்ணும் இயல்புள் ளோரே
எம்மையிலும் பிறர்மொழியாம் ஆங்கிலங்கற்
றிருப்பதற்கே எண்ணு வாரே.

திருக்குறள் காமத்துப் பாலில் களவுப் புணர்ச்சி பெற்று, மகிழ்ந்த தலைமகன் கூற்றாக வந்துள்ள,

"தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு" [1107].

என்னும் குறள் கருத்தை உட்கொண்டு கூறியது இப்பாட்டு என்க. முயற்சி உடையவர் தமக்கு உரிய உரிமை வீட்டில் வாழ்ந்திருந்து தாம் தேடிய பொருளைப் பிறர்க்கு வழங்கித் தாம் உண்டு வாழ்வார். அ.:தே போல் முயற்சி உடைய தமிழறிஞர் தம்மொழியைக் கற்று அதில் தங்கியிருந்து அம் மொழியை மற்றவர்க்கும் அறிவுறுத்தித் தாங்களும் பேசி வாழ்ந்திருத்தலையே இன்பமாகக் கருதுவர். அவ்வாறின்றி உரிமை உணர்ச்சியும், முயற்சியும் இல்லாதவர் பிறர்வளப் படுத்திய பிறமொழிச் சூழலிலேயே தங்கியிருப்பர்.

தமிழ்த்தொண்டு புரிவோர் தம்முள் ஒன்றி நின்று பணிபுரியின் நன்மை விளையும் எனல்

நகை. நாட்டுப்பற் றதுபெற்ற நல்லோர்தாம்
அருகிவர, நாளும் நாளும்
தேட்டுப்பற் றினையுடைய திருடர்களே
வளர்கின்ற தீக்கா லத்தில்,
நாட்டுப்பற் றதுபெற்று நற்றமிழை
வளர்ப்பவர்தாம் நன்றாய் ஒன்றிக்
கூட்டுப்பற் றொன்றாலே கூடிநின்று
தொண்டுசெயின் கூடும் நன்றே.

திருடாகள் செயல்படுங்காலத்தே பொருளுக்கு உரியவர்கள் விழிப்பாக இருந்து காக்க வேண்டும். அ:தே போல் நாட்டுப்பற்றில்லாத திருடர்கள் தமிழ்மொழியை அழிக்கத் தொடங்கினால் நாட்டுப்பற்றுடையோர் விழிப்பாய் இருந்து தொண்டு செய்யவேண்டும்.

அருங்கலம் என்பது உயர்ந்த அணிகலன் ஆகும். அதனை ஆக்கும் பொழுது அதற்கு வேண்டிய முத்தும், மணியும், பவளமும், பொன்னும் சேய்மையில் இருந்தாலும் ஒருவழி கூடிநின்று செயற்படுவதுபோல, தமிழ்ச்சான்றோர் சேய்மையில் இருந்தாலும் ஒருவழி திரண்டு தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்க.

தேட்டுப்பற்று – பொருள்பற்று.

தமிழ்நாட்டில் கல்வி கற்கும் முறை

சு○. பிறந்த குழந்தை தமக்கெல்லாம்
பெரிதும் தாய்ப்பால் ஊட்டுதல்போல்
சிறந்த தமிழ்த்தேம் பிள்ளைகட்குச்
சீர்சால் தமிழை முன்உணர்த்தீர்;
கறந்த பாலைப் பின்னூட்டும்
கணக்கே போலப் பிறமொழியைப்
பறந்த நிலையில் பின்னுணரப்
படிப்பித் தல்தான் கல்விமுறை.

பிறந்த குழந்தைகட்கு முதலில் தாய்ப்பாலையே ஊட்டுதல்போல், தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்கு முதலில் தமிழ்மொழியிலேயே கல்வி கற்பிக்க வேண்டும். அக்குழந்தை கட்குப் பசும் பாலைப் பின் ஊட்டுதல் போல, தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்குப் பிறமொழிக் கல்வியைப் பறந்த நிலையில் பின்னரே கற்பிக்க வேண்டும். 'பறந்த நிலை, என்றது பறக்கும் பறவையின் நிலை போல மேலோட்டமான நிலை.

உரிமை பெற்ற தமிழ் நாட்டில் அரசின் கல்வி நிலை இவ்வாறு இருக்க வேண்டும் என்க.

திருக்கோவிலில் தமிழ்த்தொண்டு

சக. பொருள்நிறைந்த கோவிலெலாம் தமிழ்வளர்ச்சிப்
பணிபுரிந்தால் புனிதம் உண்டாம்;
அருள்சிறந்த நாயன்மார் ஆழ்வார்தம்
பாடலெல்லாம் அரும்பண் ணாலே
பொருள்விளங்கப் பாடுவித்தால், பொருந்திநின்று
கேட்பவர்தாம் புலைய ரேனும்
மருள்சிறந்த மனம்உருகி, மாண்புடைய
தெய்வஅருள் மன்னி வாழ்வார்.

தமிழ்நாட்டுத் தாய்மார் தமிழ்நாட்டு மக்கள் செய்யும் தொண்டு

சஉ. தமிழ்நாட்டுத் தாய்மாரின் தகவுடைய
நாவெல்லாம் தமிழே பேசின்,
தமிழ்நாட்டுக் குழந்தைகளின் இளமனத்தே
தமிழ்மொழியே தங்கி வாழும்;
தமிழ்நாட்டு மக்களெலாம் தமிழ்மொழிப்பற்
றுடையவராய்த் தழைத்து நிற்பின்,
தமிழ்நாட்டின் அரசவையில் தமிழ்மொழியே
சிறப்பாகத் தழைத்து வாழும்.

தமிழ்நாட்டுத் தாய்மாரின் நாவில் வழங்கும் மொழியே அவர்தம் குழந்தைகட்கும் உரிய மொழியாக அமையும். அ::தேபோலத் தமிழ்நாட்டுமக்கள் வாயில் வழங்கும் மொழியே அந்நாட்டு அரசியலில் வழங்கும் மொழியாக அமையும்.

தமிழால் தாம் வாழக் கருதாமல் தமிழுக்கு வாழ்வளிக்கும் தக்கவரே மிக உயர்ந்தோர்

சஉ. நற்றமிழ்க்குத் தொண்டுபுரி
நல்லோர்கள் பலருள்ளும்
கற்றதமிழ்த் தொண்டர்களே
கருதுங்கால் முதன்மையராம்;
உற்றஅவர் தம்முள்ளும்
ஒண்தமிழால் வாழாமல்
நற்றமிழ்க்கு வாழ்வளிக்கும்
நல்லோரே மிகஉயர்ந்தோர்

தமிழ்க்குத் தொண்டு செய்யும் பலருள் கல்லாதவரைவிட தமிழை நன்கு கற்றவரே செயல்திறம் அறிந்து தொண்டு செய்பவர் ஆவர். ஆனால் தமிழைக் கற்றோரில் பலர் தமிழால் தமக்கு வருவாய் தேடிக் கொள்ளுதலையே விரும்பு கின்றனர். தம் வருவாயுள் சிறிதளவுகூட தமிழ் வளர்ச்சிக்குச் செலவு செய்வதற்கு எண்ணுவதில்லை. அவர் தமிழால் தாம் வாழ்தலையே எப்பொழுதும் கருதிக் கொண்டிருப்பர். தன்னலமுடைய அவரைப் போலன்றி, எண்ணம், பேச்சு, செயல் என்னும் இவையெல்லாம் தமிழ் வளர்ச்சி ஒன்றிலேயே வைத்து, தம் உடல், பொருள், ஆவி இவற்றையெல்லாம் தமிழுக்கே உதவும் பொதுநலத் தொண்டர் ஒருவர் வாழ்ந் திருப்பின், அவரால் தமிழ் நன்கு வாழும்.

தமிழைக் கற்றவனே!
தமிழால் நீ பிழைக்க எண்ணாதே
தமிழை நீ பிழைப்பிக்க எண். அப்பொழுதுதான்
தமிழ் வளரும்.

தமிழ்நாட்டு இளைஞருக்கு வேண்டுகோள்

சச. நன்றான தமிழ்நாட்டில் நனிசிறந்த
முருகனென நன்கு தோன்றிக்
குன்றாத ஊக்கமெனும் குன்றேறி
வாழ்பவரே! குறிப்பாய்க் கேண்மின்
ஒன்றான உம்தமிழை உலகமெலாம்
பரப்புகிற உணர்வாம் வேலால்
வென்றாகும் செயல்செய்ய வேண்டுகிறோம்
வேண்டியதை விளைப்போர் நீரே.

புறநானூறு, முருகனை முன்னியது முடிக்கும் முருகன் [56] என்று கூறிற்று. தமிழ்நாட்டுக் குழந்தைக ளெல்லாம் முருகன் என்க. அவர் ஊக்கமெனும் குன்றிலே வாழ்பவர். தம் அறிவு என்னும் வேலினால் வெற்றிச் செயல் பல செய்பவராவர். அவர் தமிழைக் காக்க வேண்டும்.

உயர்ந்தவர் வாழ்வும் இழிந்தவர் வாழ்வும்

சு(ரு). நாடுடன் மொழியும் நமக்கெனும் பொருளில்
நனிமிகச் சிறந்தன என்றே
பீடுறக் கருதிப் பேணிவாழ்ந் திடுதல்
பெரியவர் சிறந்தவாழ்க் கையதாம்;
ஓடுறு விலங்கு தம்மையே ஒவ்வ
ஊருடன் நாடுமே இன்றி
ஏடுறும் மொழியின் உரிமையும் பெறாமல்
இயங்குதல் இழிவுனோர் வாழ்வே.

நமக்கு என உரிமை கொண்டாடும் பொருள்களில் நம் நாடும், நம் மொழியும் மிகச் சிறந்த பொருளாய் இருக்கும். இவ்வாறு கருதுபவரே நல்லோர் என்க.

ஓரிடத்தில் நிலைத்து வாழ விரும்பாமல் பல இடங்களை நோக்கி ஓடிக்கொண்டே இருக்கும் விலங்குகள் போல ஊரும், நாடும் தமக்கென ஒன்றின்றி, ஏட்டு வழக்கான மொழி உரிமையையும் பெறாமல் இருப்பது இழிந்தவர் செயல் என்க.

தமிழ்மாண்பும் தமிழ்த்தொண்டும்

சகூ. இயல்பான செம்மொழியாய் இயலிசைநா
டகமென்னும் இயல்பிற் றாகி
அயல்வாழும் மொழிகளையும் அரவணைத்துப்
பழமையதாய் ஆக்கம் நல்கிப்
பெயல்வாழப் புரிகின்ற நன்முகில்போல்
அறிவுமழை பெருகப் பெய்யும்
செயல்வாழும் செந்தமிழைப் பரப்புவோர்
செந்தமிழின் சிறந்த தொண்டர்.

தமிழர் அயல்நாட்டு மொழிகளை அறவே வெறுத்து ஒதுக்குபவர் அல்லர். தமிழ்மொழியின் செவ்விகெடாது வேண்டிய அளவான பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொள்பவர் ஆதலின் "அயல்நாட்டு மொழிகளையும் அரவணைத்து" என்று கூறப்பட்டது. அது செய்யுள் மொழியுள் திசைச் சொற்களையும், வடசொற்களையும் சேர்த்துக் கொள்ளும் செயலால் புலனாகும். ஆனால் திசை மொழி வடசொற்களைத் தமிழில் சேர்த்து வழங்குங்கால் தமிழ் எழுத்துக்களாலும், தமிழ் இலக்கண அமைப்பாலும் அவற்றை வழங்குவர்.

அறிவினர் செயலும் அறிவிலார் செயலும்

சள. வாழுமிடம் வாழும்மொழி இரண்டினையும்
வளப்படுத்தி வளமாய் வாழ்தல்
ஆழ்மையுடைப் பேரறிஞர் நாகரிகச்
செயலாகும்; அறிவே இல்லா
ஏழ்மைபெறும் மக்களுடை எண்ணத்தில்
இருப்பதெலாம் பொருள்ஒன் றேயாம்
தாழ்மையுள பொருள்பெறற்குத் தம்நாட்டைத்
தாழ்த்துதற்கும் தயங்க மாட்டார்.

உள்உணர்வாகிய மனஉணர்வுடன் புறஉணர்வாகிய ஐம்புல உணர்வினையும், நன்றாகப் பெற்றவரே மக்கள் ஆவார். உள்உணர்வு நன்றாக அமையாமல் ஒழுங்கு இல்லாத ஐம்புல உணர்வை மட்டும் உடையவர் மாக்கள் ஆவார். இவர் ஐம்புல நுகர்விற்குப் பொருளைப் பெறுபவர் என்க. அந்தப் பொருள் ஒன்றையே கருதித் தாம் வாழும் நாட்டிற்கும், பேசும் மொழிக்கும் தீங்கினையே செய்வர்.

பிழைபடப் பேசுதல் தமிழுக்குத் தீங்கு

சஅ. தமிழ்எனும் சொல்லைத் தமிள்தமில் என்றே
தக்கநா வளமிலார் உரைப்பார்;
அமிழ்தினை நிகரும் வாழ்எனும் மொழியை
அறைவரே வாளுடன் வாலாய்;
இமிழ்கடல் உலகில் பிழைபடப் பேசும்
இயல்பினுக் குரியராம் இவரால்
உமிழ்தரும் இழிவு தமிழ்க்குவந் திடுமே!
ஒன்றிலார் இதைஉணர் வாரோ?

"மொழிவது அறமொழி" என்று ஆத்திசூடி கூறும். "கசடறக் கற்க" என்பது திருக்குறள். தமிழைப் பிழையில்லாமல் பேசவும், எழுதவும் கற்றுக் கொள்வது சிறந்த நாகரிகமாகும்.

"நாவிளிம்பு வீங்கி அண்பல் முதலுற
ஆவயி னண்ண மொற்றவும் வருடவும்
லகார ளகார மாயிரண்டும் பிறக்கும்.
[தொல் - எழுத்து - 96]

என்னும் தொல்காப்பிய நூற்பாப்படி நாவின் ஓரம் தடித்து அடிப்பல்லினைத் தொட்டால் லகாரம் பிறக்கும். அதுவே மேல் வாயின் தொடக்கத்தைத் தடவினால் ளகாரம் பிறக்கும்.

"நுனிநா வணரி அண்ணம் வருட
ரகார ழகார மாயிரண்டும் பிறக்கும்"
[தொல் - எழுத்து – 95]

நுனிநாக்கு மேல் நோக்கிச் சென்று நடு அண்ணத்தைத் தடவினால் ரகாரமும், உள் அண்ணத்தைத் தடவினால் ழகாரமும் பிறக்கும்.

இவ்விதிகளை அறிந்து ஒலிக்கும் நாவளம் இல்லாதவர் தமிழ் என்பதைத் தமிள் தமில் என்றும் வாழ் என்பதை வாள், வால் என்றும் பிழைபட ஒலிப்பர்.

ஒரு பள்ளியில் ஆசிரியர் ஒருவர் மாணவரைப் பார்த்து நீங்களெல்லாம் தமிளை பிளையில்லாமல் பேசவேண்டும் என்று அறிவுரை வழங்கினாராம். அவர்க்கே தாம் பிழையாகப் பேசுகின்றோம் என்று விளங்கவில்லை. பள்ளிகளில் ஆசிரியர் நிலை இதுவாகும். மாணவர் நிலையோ பள்ளிகளில் மிக மோசமாகப் போய்க்கொண்டுள்ளது. அவர், முப்பது என்பதை நுப்பது என்றும், எண்பது என்பதை எம்பது, எம்பளது என்றும், அறுபது எழுபதை அறுவது எழுவது என்றும் வாழ்க்கை என்பதை வாள்க்கை என்றும் பேசக் காண்கின்றோம். பள்ளிகளிலேயே இந்த நிலை இருக்குமானால் கற்காத பொதுமக்களுடைய நிலை எப்படி இருக்கும் என்பதை அறிஞர்கள் உணர்ந்து கொள்க. நாட்டில் மொழியை மக்கள் பிழையில்லாமல் பேசவேண்டும். இது மொழி நாகரிகமாகும். பிழையாகப் பேசுவது அநாகரீகமாகும்.

அரசியலில் புகுவோர் தமிழை நன்கு கற்றால் நலமே செய்வார்.

சகூ. செய்தற் கெண்ணாத் தவறொன்றைச்
செய்த தமிழப் புலவன்றன்
நய்வை அகற்ற விசிறிகொண்டே
நன்றாய் வீச, வாள்வீசாய்
உய்வைச் செய்ய இதுசெய்தாய்
உற்ற தமிழை முற்றுணர்ந்த
மெய்மை அறிவால் இதுசெய்தாய்
என்றே புலவன் வியந்தானே.

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்பான், தன் முரசுகட்டிலில் அறியாது ஏறித் துயின்ற மோசிகீரன் என்னும் தமிழ்ப்புலவனைப் பார்த்து, தன் வாளால் வீசுதலை விட்டு விட்டு அதற்குப் பதிலாக விசிறி கொண்டு வீசிய நிலையை அறிந்த அப்புலவன், அரசனைப்பார்த்து "நீ தமிழ் முழுவதும் உணர்ந்துள்ளாய்; அந்தத் தகுதியினாலே தவறு செய்த என் மேல் சினங்கொள்ளாமல் விசிறி கொண்டு வீசி இனிமை செய்தாய், என்று குறிப்பிட்டான். இந் நிகழ்ச்சியைக் கருதினால் தமிழ் கற்றவருக்குத் தவறு செய்பவரிடத்தில் இரக்கமே உண்டாகும் என்ற செய்தி தெரிகின்றது. புறநானூறு - பாடல் 50

"அறியா தேறிய வெண்ணைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
அதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்"

என்னும் பகுதியால் உணர்க.

தமிழ் கற்றவர் பண்புகளை,

"தமிழெனும் சொற்குப் பொருள்இனி தாகின்
தமிழர்தம் பண்பும்அவ் வினிதாம்;
இமிழ்கட லுலகில் அன்புடன் அறமும்
இணையிலா வாய்மையும் பணிவும்
அமிழ்தென உரைக்கும் இன்சொலும் ஈயும்
அருளொடு நற்செயல் பலவும்
தமிழர்தம் பண்பாம்; இப்பொருள் சிறக்கத்
தண்ணிழற் காப்பியம் படைத்தேன்"

(திரு. அடிகளாசிரியர் தண்ணிழல், பாடல் 6)

என்னும் பாட்டால் அறிக. தமிழ் படித்தவருக்கு இரக்க உணர்ச்சி வருமென்பதை இப்பாடல் உணர்த்துகின்றது.

தமிழைக் கற்றவர் பிழை செய்யாமல் நலமே செய்வர்.

குo. அரசிற் புகுந்த மக்களெலாம்
அரிய தமிழை ஆய்ந்தறியின்
பெருக பிழைகள் செயமாட்டார்
பெரிதும் நலமே புரிந்திடுவர்;
தெரிய பிறதம் நோயினையே
தேர்ந்து தமதாய்க் கொண்டொழுகல்
அரிய அறிவின் பயனென்றே
அழகாய்க் குறள்தான் அறைந்திடுமே.

திருக்குறளில் இன்னா செய்யாமை என்னும் அதிகாரத்தே

''அறிவினால் ஆகுவது உண்டோ? பிறிதின் நோய்
தம் நோய்போல் போற்றாக் கடை'' (315)

என்னும் குறட்பாவின் கருத்தை உணர்ந்த அறிவுடையோர், உணர்ந்த அறிவிற்குப் பயனாக, பிற உயிர்கட்கும், பிற மக்களுக்கும் தம்மால் துன்பம் உண்டாகாமல் பாதுகாத்து நடப்பர் என்க.

இக்காலத்தில் மக்கள், சாதிப் பிரிவினாலும் சமயப் பிரிவினாலும், கட்சிப் பிரிவினாலும் பிறருக்கு இன்னா செய்தலையே தாம் செய்யும் தொண்டாகக் கொண்டு ஒழுகுகின்றனர். காரணம் அறிவின்மை என்க.

வேறுபட்ட இரண்டு உளங்கள்.

ருக. நாட்டினை மொழியைப் போற்றிடக் கருதும்
நல்லவர் உள்ளமும், அன்றி,
நாட்டினை மொழியை ஒம்பிடக் கருதா
நலமிலார் உள்ளமும் வேறாம்;
கூட்டுற விலாத இருவர்தம் உளத்தால்
கொடுமைகள் நிகழ்தலும் உளவாம்;
ஈட்டுறும் நல்லோர் மனம்தள ராமல்
எண்ணிய தொண்டையே புரிக.

உரிமை அடைந்த தமிழகத்தில் தமிழ் வளர்ச்சிக்கு அறிஞர் தொண்டு செய்ய முற்பட்டால், பிறமொழிப் பற்றுடையோர் அதற்குத் தடையாய் இருந்து வன்செயல் செய்வர். ஆதலின் தொண்டு செய்யும் அறிஞர் அதற்குச் சிறிதும் மனம் தளராமல் இருந்து கொண்டு தொண்டு செய்ய வேண்டுமென்க.

தமிழறிஞர் தமிழுக்குச் செய்யும் நல்ல தொண்டு

குஉ. இடக்கர் அடக்கி, மங்கலமாய்,
இழிவாம் வழுச்சொல் தமைநீக்கி,
அடக்க மான தமிழ்மொழியால்
அறிவு தோன்றப் பேசுதலே
நடக்கும் தமிழ்க்கு நாம்செய்யும்
நல்ல தொண்டாம், இத்தொண்டை
முடக்கம் இன்றித் தமிழறிஞர்
முன்னி விழிப்பாய்ச் செய்வாரே.

"நடக்கும் தமிழ்" என்றது பேச்சுத் தமிழை.

தமிழறிஞர் பயனில்லாத சொற்களை ஒருபொழுதும் பேசாமல் அறிவுதோன்றும் சொற்களையே பேசுதல் வேண்டும்.

ஊர்மக்கள் வாயில் அளவு கடந்து, இடக்கர்ச் சொல் என்னும் வண்டப் பேச்சே வரும்.

சில கற்றோரும் பிழையாகவே பேசுவர். இப்பேச்சு அவர்களிடத்தில் சொல் நாகரிகம் இல்லை என்பதையே காட்டும்.

தமிழில் பல கல்வி வேண்டும்

(நே.) அரசியலின் தனிக்கல்வி, விஞ்ஞானப்
பெருங்கல்வி, அருமை சான்ற
உரசியலும் வான்கல்வி, கடற்கல்வி
மருத்துவமாம் உயர்ந்த கல்வி
பரசியலும் ஆன்மீகப் பெருங்கல்வி
சிற்பமெனப் பகரும் கல்வி,
வரமுடைய பலகல்வித் திறனெல்லாம்
தமிழ்மொழியில் வளர்தல் வேண்டும்

ஆன்மீகக் கல்வியை "ஆன்மீகப் பெருங்கல்வி" என்று கூறிய கருத்தை அறிஞர் நன்கு கருதுக.

ஔவை பொதுவாக "வித்தை விரும்பு" என்று கூறினாள். கீதையில் கண்ணபீரான் "நான் வித்தைகளில் அத்யாத்தம வித்தையாக இருக்கின்றேன்" என்று கூறினார். இங்கே அத்யாத்ம வித்தை என்பது ஆன்மீகப் பெருங்கல்வி ஆகும். கல்வி இரண்டு விதம் என்க. ஒன்று அறிவில்லாத தாகிய சடப்பொருள்களை ஆராய்ந்து உணரும் கல்வியாகும். மற்றொன்று அறிவுப் பொருள்களை ஆராய்ந்து உணரும் கல்வியாகும். அறிவில்லாத பொருள்களைக் காட்டிலும் அறிவுடைய பொருள்கள் சிறந்தன ஆகையால் அறிவுப் பொருளை ஆராயும் ஆன்மீகப் பெருங்கல்வியே சிறந்ததென்க.

தமிழ் எண்கள் மறைந்து வருதல் பற்றி

ரு சு. எண்ணெழுத்தாம் இருகண்ணில் முதற்கண்ணாம்
தமிழ்எண்ணை இழந்தே போனோம்;
கண்ணென்னும் கல்வெட்டுள் அவ்வெண்ணின்
கணக்குகளைக் கருதிப் பார்ப்போர்
மண்ணென்னும் இவ்வுலகில் சிலராகத்
தானிருப்பர்; மன்னி நின்றே
பண்ணென்னும் தமிழ்வளர்க்கும் கலைக்கழகம்
தானும் இதைப் பார்த்த துண்டோ.

"எண்ணும் எழுத்தும் கண்" என்று திருவள்ளுவரும், ஔவையாரும் கூறுவர். அந்த இரண்டு கண்ணில் 'எண்' என்பது முதற்கண்ணாகும்.

தமிழ்நாட்டில் தமிழ் எண்களாகிய க, உ, ந, சு, ரு, சூ, எ, அ, கூ, ய, ள, த முதலான முழு எண்களையும் முந்திரி முதலான பின்ன எண்களையும், நாம் மறந்தே போனோம். தமிழகக் கல்வெட்டைப் படிப்பவர்கள் இந்த எண் பயிற்சி இல்லாமல் படிக்க முடியாது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகமும், இந்த எண்களைப் பற்றி எந்த விதமான ஆராய்வு செய்யாமல் இருப்பதும் பயன் படுத்திக் கொள்ளாமல் இருப்பதும் வருந்தத்தக்க செயலாகும்.

இத்தமிழ் எண்களைப் போலேயே தமிழ்மக்கள் வட மொழியைப் படிப்பதற்காக வகுத்துக்கொண்ட கிரந்த எழுத்துக் களையும் மறையவிடாமல் பாதுகாக்க வேண்டும்.

தமிழ்க் கூட்டத்தில் தமிழில் பேசாமல் ஆங்கிலத்தில் பேசுபவர் நிலை

ருரு. தமிழ்நாட்டில் தமிழ்மக்கள் நிறைந்தே நிற்கும்
தகுதிபெறு கூட்டத்தில் பேசவந்தோர்
அமிழ்தான செந்தமிழால் பேசல் வேண்டும்
அதுசெய்ய மாட்டாதார் ஆங்கிலத்தில்
இமிழ்கின்ற கடல்போல முழங்கி என்ன?
இம்முழக்கால் எவர்களுக்கும் பயனேயில்லை;
உமிழ்கின்ற இவர்பேச்சால் உறக்கம் அன்றி,
ஒருவருக்கும் உணர்வென்ப துதித்திடாதே.

தமிழ்நாட்டில் தமிழ்மக்கள் நிறைந்த கூட்டத்தில் சிலர் ஆங்கிலத்தில் பேசி முழங்குவர். அப்பேச்சினால் மக்களுக்கு உறக்கமே வரும். உணர்ச்சி வராது.

வாழ்வில் இலக்கு இல்லாதவர்

ருசூ. நாடு வாழ மொழிவாழ
நல்ல இலக்கே இல்லாதார்
கூடு கட்டிக் குடியிருக்கும்
குருவிக் கூட்டம் போல்வாரே;
தேடி இரையைத் தின்பதுவும்
திளைத்துக் குஞ்சை ஈனுவதும்
ஓடி முழங்கி உலாவுவதும்
உற்ற இலக்காம் அவற்றினுக்கே.

உண்பதும், பெண்களுடன் கூடிப் பிள்ளைகளைப் பெறுவதும், அங்கும் இங்கும் ஓடி ஆடிப் பேசித் திரிவதும் மக்களுக்கு நல்ல இலக்கு அல்ல, நாட்டினையும் மொழியினையும் வாழச் செய்வதற்கு நல்ல தொண்டு செய்தலே நல்ல இலக்காகும்.

திருநாவுக்கரசரும் "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்று கூறுவர்.

பிறர் நலம் கருதும் பெருநோக்கம் உடையவரே, நாடு வாழ மொழி வாழ எண்ணுவர். தன்னலம் கருதும் குறுகிய நோக்கம் உடையோர் தான் உண்டு களித்திருக்கும் ஒன்றையே எண்ணுவர். அவ்வாறு எண்ணுவதோடன்றி நாடு வாழ்தலைக் கண்டு பொறாமையும் படுவர்.

பிறர் நன்றாக உடுப்பதையும் உண்பதையும் காணில் மகிழ்ச்சி அடையாமல், "வடுக்காணவே வல்லது கீழ் [1079 எண்] என்பது திருக்குறள்.

நன்கு கல்லாதவரின் செயல்

நள. உழைப்பாலே பொருள்தேடும் உரனில் லாதார்
உற்றதொரு வஞ்சகத்தால் களவால் நாளும்
பிழைப்பாகப் பொருள்தேடும் பெற்றி போன்றே
பெரிதுழைத்துக் கல்லாத பேதை எல்லாம்
தழைப்பான பிறர்படைப்பைத் தனதாய்ச் செய்தும்
தவறுபட எழுத்துச்சொல் பொருளை வைத்தும்
இழிப்பான இம்முறையால் பிழைகள் செய்தே
இழிவையெலாம் தமிழ்மொழிக்கே இயற்று வாரே.

உழைத்துக் கற்று நல்ல இலக்கியங்களைப் படைக்கும் ஆற்றல் இல்லாத சில பேராசைக்காரர் பிறர் படைத்த இலக்கியப் படைப்பை வஞ்சனையால் தமதாக்கிக் கொள்ள முயல்வர்.

தன்னலமுடையவரால் தமிழ்த் தொண்டு நன்கு நடவாது

(உ அ.) தாம்வாழக் கருதுகிற தன்னலத்தார்
தமிழ்த்தொண்டர் போலத் தோன்றித்
தேம்வாழும் அவைகளிலே திருக்கூத்து
வைத்திடுவர், கூத்தே செய்வார்
ஏம்வாழும் எண்ணமெலாம் இரும்பொருளில்
இருப்பதுபோல் இவரும் எண்ணி
ஓம்வாழும் தமிழ்த்தொண்டை உறுதியாய்ச்
செய்யாரே; உளப்பற் றில்லார்.

தன்னலம் உடையோர் தமிழ்த் தொண்டு செய்பவர் போல நடித்துத் தாங்கள் வாழப் பொருள் திரட்டுவர். "ஓம்வாழும்" என்பது ஓம்புதல் வாழும் என்று பொருள்படும்.

வடமொழியாளர் எழுதும் தமிழ் நடை

நகூ. வடமொழி கற்றோர் தமிழ்நடை படைக்கின்
வடசொலை எழுத்தொடு கலந்து
மடமுற எழுதி மணியொடு பவளம்
மன்னிய நடையென மகிழ்வர்;
இடமுறு தமிழை வடமொழி யதனுள்
இணைந்துறக் கலந்திட இசையார்
சடமுறத் தமது மொழியையே புரக்கும்
சால்பிலாத் தன்னலம் படைத்தோர்.

மேற்கூறிய பாட்டுடன் கீழ்வரும் பாட்டையும் ஒப்பிட்டறிக

மொழியியலின் நலம்விரும்பார் பிறமொழியை
எழுத்தோடு பொருந்தச் சேர்த்தே
இழிவுபெறும் நடையாக்கி இச்செயலை
இயற்றியதால் இன்பம் கொள்வார்;
பழியுடைய இச்செயலால் தமிழ்மொழிதான்
பண்பிழந்து பலவா றாகி
இழிவுபெறும் என்பதனை எண்ணாமல்
இவர்செய்வர்; இழிந்த தொண்டாம்.

உயிர் எழுத்து பன்னிரண்டு, மெய் எழுத்து பதினெட்டு, ஆய்த எழுத்து ஒன்று ஆக 31 எழுத்தாலே நடைபெறும் இனிய மொழி தமிழாகும். தமிழ் மொழிக்கு ஒவ்வாத பிற மொழிகள் வரின் அவற்றைத் தமிழ்நடைக்கு ஏற்பத் திரித்தே அமைத்துக் கொள்ள வேண்டும். திரிக்காமல் அப்படியே அமைத்துக் கொண்டால் தமிழின் இனிமை கெடும்.

பார்ப்பார்த் தமிழ்த் தொண்டு

கூ0. ஆர்ப்பாம் உலகில் மக்களுடை
அடியாம் உளத்தில் ஆணியைப்போல்
வேர்ப்பா வியதாய்த் தாய்மொழியே
விளங்கிக் கிடக்கும்; அ:தன்றி,
ஏர்ப்பாய் முன்னோர் மொழியாக
எண்ணும் இந்த உணர்வாலே
பார்ப்பார் செய்யும் தமிழ்த்தொண்டுள்
பதுங்கி வாழும் வடமொழியே.

மொழிப்பற்று இரண்டு வகை:

1. ஒவ்வொருவர் உள்ளத்திலும் தாய்மொழிப் பற்றானது பசுமரத்தில் அடித்த ஆணியைப்போல நன்றாகப் பதிந்து நிற்கும்.

2. தாய்மொழியே அன்றித் தம்முடைய முன்னோர் மொழி என்று கருதிக் கொள்வதால் அம்மொழியின் மேலும் அவர்க்குப் பற்றுண்டாகும்.

பார்ப்பனரில் தெலுங்கு, கன்னடம், தமிழ் முதலான பல மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட பலர் இருப்பதை நாம் காண்கிறோம். அப்பலரும் வடமொழி ஒன்றையே தம் சமய முன்னோர் மொழியாகக் கருதி அதன் மேல் மிகவும் பற்று வைத்திருப்பர். அதனாலே தமிழ்நாட்டில் வாழும் பார்ப்பனர் தமிழ்த்தொண்டு செய்யப் புகுந்தால் அதனுள் வடமொழித் தொண்டும் பொருந்தியிருக்கும். ஒரு சிறந்த பார்ப்பனத்தமிழ்ப் பேரறிஞர் தமிழ்மொழி என்று எழுத வேண்டிய இடத்தில் தமிழ்ப் பாஷை என்றே எழுதுவர். அதே

போல முகம்மதியரும் கிறித்துவரும் தமிழ்நாட்டிலே தமிழ் பேசும் குடியினராக இருப்பினும் தங்கள் சமய முன்னோர் மொழியாகிய அராபி, ஆங்கிலம் முதலான மொழிகளிலேயே பற்றுள்ளவராக இருப்பர். ஆகையால் இவர்களெல்லாம் தமிழ் மொழிமேல் முழுமனதுடன் தொண்டு செய்பவராக அமைய மாட்டார்.

வாழ்த்து

கூக. மன்னிடும் மக்கள் மனத்திலே தங்கி,
மங்களப் பேரொளி காட்டி,
நன்னர்என் கின்ற பண்பெலாம் உணர்த்தி,
நாற்பொருள் பயன்றனை ஊட்டி,
அன்னையில் விளங்கும் செந்தமிழ்த் தாய்க்கு
ஆக்கமே நல்கிடும் தொண்டைத்
தன்னலம் இன்றிச் செய்திடும் எங்கள்
தமிழகம் தழைத்துவாழ்ந் திடுக.

மக்கள் மனத்திலே தங்கி அவர்களுக்கு மங்கலப் பேரொளியைக் காட்டி, நல்ல பண்பையெல்லாம் உணர்த்தி, அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் நான்கு பயனாகிய பாலை ஊட்டித், தாய்போல் விளங்குவது செந்தமிழ்த் தாயாகும். அத்தாய்க்கு ஆக்கம் தரும் தன்னலமற்ற தொண்டைத் தமிழகம் செய்து நன்கு தழைத்து வாழ்வதாகுக.

தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும் முற்றும்

பிற்சேர்க்கை - 1

தமிழ்த் தொண்டு

தமிழ்ப் பேராசிரியர் திரு. அடிகளாசிரியரவர்கள் ஈசுரயாண்டு ஆவணித் திங்கள் முதல் நாள் (16–8–1937) "**எங்களூர்**" என்னும் சீர்திருத்த நூலை உரைநடை வடிவில் எழுதி வெளியிட்டுள்ளார். அந்நூலுள், "**தமிழ்த் தொண்டு**" என்னும் தலைப்பில் பின்வரும் பதின்மூன்று பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அப்பாடல்களை அவரியற்றியபோது அவரின் வயது இருபத்தேழென்பது குறிப்பிடத்தக்கது.

க. வான்றமிழின் திருத்தொண்டீர்! வளங்கெழுமும்
தமிழணங்காள் வாட்டங் கண்டும்
நான்றமிழ னெனவிருந்தீர் நன்றேயோ!
நன்றேயோ!! நம்பால் நிற்கும்
ஊன்பொருள்க ளொழிந்தாலும் ஊக்கமது
ஒழியீராய் உறுதிப் பாட்டால்
தேன்தமிழின் வளஞ்சிறக்கச் செய்வனவும்
தவிர்வனவுஞ் சிறக்கப் பேணீர்.

உ. ஆங்கிலத்தாள் வரவாலே தமிழணங்காள்
புதியனவும் அமைந்தா ளேனும்
தாங்கிலளே தலைமையினை, "நாமென்ன
தமிழரென நாமம் பெற்றோம்?"
ஏங்கிலளாய்ச் செய்யோமேல் நாமிருந்தும்
நடைப்பிணமே என்ப தோர்ந்து
ஆங்கிலத்தின் உயர்வடைய ஆம்
தொழிலே செய்திடுவம் அருந்தொண்டீரே!

ஈ. தமிழ்ப்புலவர் தமைவளர்க்கும் தகைப்பெரியோர்
தமைக்காணோம்; தயக்க மின்றி
உமிழ்ப்புலமை உயர்வதற்கும், ஓரினத்தார்
உயர்வதற்கும் உறுதி கண்டோம்;
இமிழ்க்கடல்சூழ் வையகத்தில் உடன்
பிறந்தீர்! இவ்வண்ணம் இருப்போமாயின்
சமழ்ப்பவைடவோம் துயிலாதீர்! துயிலாதீர்!!
எழுந்திடுவீர் – தயக்கம் இன்றி.

உ. காவியங்கள் ஆய்ந்திடுவோம்; கற்பனைகள்
அமைத்திடுவோம்; கற்று நின்ற
ஓவியம்போல் உரைபொழிவோம்; உணர்வியலை
ஆராய்வோம்; உளத்தின் கண்ணே
தேவியலை நிறைத்திடுவோம்: தேடுவோம்
பலநூல்கள்; தியக்கம் இன்றி
சீவியத்தின் பெரும்பயனே இவையாகச்
செய்திடுவோம் சீர்மை மிக்கீர்!

ஊ. பிச்சையெடுத் தானாலும் பெருந்தமிழைப்
புரந்திடுவோம்; பிறப்பு நோக்கா(து)
கொச்சைமொழிப் பாலர்களைத் தமிழ்நெறியிற்
புகுத்திடுவோம்; குணஞ் சிறந்த
நச்சுவிழி நங்கையரும் நம்போலத்
தமிழ் பயின்று நகைவிராவி
இச்சையுடைக் குயில்போலக் கிளிபோல
உரைபொழிய இயற்றுவோமே.

எ. வான்பிறந்த தமிழகத்தே நான்பிறந்தே
னென்றாலும் வளங்கள்-துன்னும்
தேன்பிறந்த தமிழறியேன் என்பதிலும்
பெருமடமை தேடிக் காணீர்!
ஊன்பிறந்த பயன்கொள்ளா(து) உழலுவீர்!
ஊமர்களே! உமினும் நன்று
நான்பிறந்த வீட்டில்வளர்
நாய்ப்பிறப்பு நன்மையற்றீர்! நவையுற்றீரே!

எ. ஆங்கிலத்தார் தம்போல ஆடையணி
அலங்கரிப்பீர்! அவர்கள் போன்று
தேம்பொதியும் மொழிபரப்பும் செயலற்றீர்!
உம்செயற்கை செவ்விதன்றோ?
நாம்வதியும் வீட்டகத்தே நகைமணியார்
தாம்ஆடு நடனங் கண்டே
வாம்மரத்தின் குரங்காடும் கதைபோன்ற(து)
இக்கதையே வன்மையற்றீர்!

அ. சோற்றுக்கே வழியிலராய்த் தமிழ்ச்சிறார்
சமழ்ப்படையத் தூய்மையின்றி
வேற்றுக்கே பணமிறைக்கும் வீணர்களே!
உங்கள்பொருள் வீங்கலின்றி
பாற்றுக்கே எதிர்ப்பட்ட பிசிதம்போல்
போகாதோ? பண்பிலீரே!
நாற்றுக்கே நீர்விட்டால் நற்பயனைப்
பெறலாமே! நாடுவீரோ?

கூ. இமையவரைச் சிகரமுதல் எத்தனையோ
உயர்வரையில், இலங்கும்வானில்,
அமைவனவாம் "புட்குலம்போல்" அயல்நாட்டுச்
சிறுவரெலாம் ஆர்க்கின் றார்கள்;
சுமையெனவே பிறரிகழ அறிவின்றித்
துய்மையின்றித் துணிவுமின்றித்
தமைவருத்தும் "பிணிபோலத்" தமிழ்ச்சிறார்
தவறுறுதல் தக்கதேயோ?

கo. இலக்கணமும் இலக்கியமும் இயல்நாட்டின்
சரித்திரமும் இனியதான
புலக்கணமாம் அழகுபெறப் புதுநாட்டின்
புதல்வரெலாம் புகல்கின்றார்கள்
அலக்கணுக்கோர் உறைவிடமாய், அழகழிந்து,
மனஞ்சாம்பி, ஆர்வமின்றி,
நிலக்கணத்தில் பெருஞ்சுமையாய் நிற்பதோ?
நம்புதல்வர் அளியால் மிக்கீர்!

கக. விஞ்ஞானப் பெருங்கலையும், வீங்குகடல்
நிலத்தியலும், விரைந்துகற்று
மெஞ்ஞானப் பெருவாழ்வை மேல்நாட்டின்
புதல்வரெலாம் மேவுகின்றார்,
எஞ்ஞான நூல்களையும் எள்ளளவுங்
கல்லாமே, எளிமையுற்று,
அஞ்ஞானப் பெருவாழ்வில் அழுந்துவதோ?
நம்புதல்வர் அளியால் மிக்கீர்!

வேறு

கஉ. மோட்டாரும், வான்ரதமும் முயற்சியுடன் நமதுமேல்
நாட்டார்கள் செய்திடவே நாம்அவைதான் செய்யாதே
சீட்டாடி வம்பிழுத்துச் செயிலுக்கே போய்ப்புகுந்து
கோட்டானைப் போலிருக்கக் குறிக்கொண்டே, திரிவோமே

கங. எல்லாரும் ஒருமனத்தால் இயற்றுவமே தமிழ்த்தொண்டு
எல்லாரும் ஒருமனத்தால் இயற்றுவமே தமிழ்வளர்ச்சி
எல்லாரும் ஒருமனத்தால் இயற்றுவமே தமிழ்ப்புதுநூல்
எல்லாரும் ஒருமனத்தால் இயற்றுவமே தமிழ்த்திருநாள்.

பிற்சேர்க்கை 2

பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் வாழ்வும் பணியும்

(அ. சிவபெருமான்)

தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் உள்ளது குகையூர் என்னும் கூகையூராகும். இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்று கூறும். பொது மக்கள் கூகையூர் என்று கூறுவர்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து, ஆற்றங்கரைப் புதருள் தங்கி சிவயோக சமாதியை மேற் கொண்டிருந்தனர். அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னராகிய **மாலாங்கன்** என்பவன் சித்தநாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவர்க்குப் பணிவிடை செய் தொழுகினான். அவ்விருவருடைய பேரன்பினையும்மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர் அவ்விருவரையும் இளமை உடையவராக ஆக்கி, வீரசைவ சமய நெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்து, பக்குவற்கு உபதேசிக்கும் மாதவக் குருபரனாக மாலாங்கனை ஆக்கினர்

அம்மாலாங்கனிலிருந்து அவன் பரம்பரை சித்த நாதேச்சுரா தினமாக ஆயிற்று.

அப்பரம்பரையில் பிற்காலத்தில் **பட்டத்துப் பெரியசாமி** ஐயர் என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி குங்கும அம்மாள் ஆவர். அவ்விருவரும் நன்கு படித்தவர்.

அவ்விருவர்க்கும் கி.பி. 1910-இல் சாதாரணயாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனுர்

இலக்கினத்தில் பூசம்நாளில் திரு அடிகளாசிரியர் முதல் மகனாகப் பிறந்தார். இவரின் பிள்ளைப்பெயர் குருசாமிஅய்யர் என்பதாகும். பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத்தலைவர் தவத்திரு. மறை மலையடிகளார் கருத்துப்படி திரு. அடிகளாசிரியர் எனப் பெயரை மாற்றிக்கொண்டார்.

இளமைக்காலமும் கல்வியும்

இவர்க்கு ஏழாம் யாண்டில் தந்தையார் காலமாகி விட்டார். இவர் தாயார் குங்கும அம்மாள் என்பவர்தான் இவரைப் பேணிப்புரந்து கல்வி கற்குமாறு செய்தார். பெரம் பலூருக்கு அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவர் தாயார் பிறந்த ஊராகும் தாய்மாமன். இருவராவர் மூத்தவர் திரு. கு. சுப்பிரமணிய தேவர். இளையவர். திரு. கு. சிவப்பிரகாச தேவர் ஆவர். இவ்விருவரும் நன்கு தமிழ் பயின்றவர்கள். மருத்துவக்கலை, சோதிடக்கலை ஆகியவற்றிலும் வல்லவர்கள். அடிகளாசிரியர் இவர்கள் (தாய்மாமன்) வீட்டில் தங்கி தமிழ்ப் பயிற்சியையும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த திரு மருதநாடார் என்பவரிடம் சோதிடக் கலையைக் கற்றுக்கொண்டார். முசிறி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த உயர்திரு. வீ. குமாரவீரையர் என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையை முறைப்படி பாடங் கேட்டார். 1937-இல் இவர் தனியாகப் பயின்று சென்னைப் பல்கலைக் கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப் புலவர் பட்டத்தைப் பெற்றார்.

மயிலம் கல்லூரியில் பணி

14—7—1938-இல் மயிலம் திருமடத்தில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்ற பெயரால் ஒரு தமிழ்க் கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதல் ஆசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதல் பெற்றபின் 1—7—41-இலிருந்து 30—11—41 வரை விரிவுரையாளராகவும், 1—12—42-இலிருந்து 1—7—1950 வரை துணைத்தலைவராகவும் அங்குப் பணியாற்றினார்.

கரந்தைக் கல்லூரிப் பணி

பின்னர் 3—7—1950-இலிருந்து 3—7—1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும், துணை முதல்வராகவும் பணியாற்றினார். 4 - 4—70-இலிருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்விற்குப்பின்

சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க் கல்லூரி ஒன்றில் முதல்வராக மூன்றாண்டுகள் பணியாற்றி யுள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சி யாளராக ஓராண்டு (1977) பணியாற்றியுள்ளார்.

20—1—1982 ஆம் நாளிலிருந்து 1—10—1985 ஆம் நாள் வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சுவ்டிப் புலத்தில் சிறப்புநிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதன்பின் மூப்பின் காரண மாகத் தமிழ்ப்பல்கலைக்கழகப் பணியிலிருந்து தாமே விலகிக் கொண்டார். மூப்பின் காரணமாகத் தமிழ்ப்பல்கலைக் கழகப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட அவர் தம் இல்லத்திலிருந்து அப்பணியை (தொல்காப்பியப் பதிப்புப் பணியை) நிறைவு செய்து வழங்கினார்.

குடும்பம்

இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்

என்று தமிழுக்காக வாழ்ந்து வரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், தாம் பிறந்த ஊரிலேயே பிறந்த கூரை வீட்டிலேயே மண்தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நிலைப்படுத்துவார் போல் வளங்குன்றிய வாழ்வே வாழ்ந்து வருகிறார். தமிழ்ப்பணிக்காகவே தம்பொருளா தாரத்தைச் செலவிட்டு, வேண்டுமென்றே வளங்குன்றிய வாழ்வைத் தேடிக்கொண்டவராவார்.

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி சான்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனைய மனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் உடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. எழுதி எழுதியே முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறுகின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. அகவை (88) முதிர்ந்த நிலையில் எந்த ஆசையும் அற்று, தம் நூல்கள் அச்சேறித் தமிழகத்தில் உலா வரவேண்டுமென்ற பற்று ஒன்றுடன் மட்டுமே இவர் வாழ்ந்து வருகிறார்.

அடிகளாசிரியரின் படைப்புகள்

1. உரைநூல்கள்:

அ) உரைப் பதிப்புக்கள் (உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)

1 அருணகிரி அந்தாதி – சரசுவதிமகால் வெளியீடு 1967

2 மருதூரந்தாதி உரை – சரசுவதிமகால் வெளியீடு 1968

3 காலச்சக்கரம் – சரசுவதிமகால் வெளியீடு (சோதிட நூல்) 1969–79

4 வராகர் ஓராசாத்திரம் (சோதிட நூல்) சரசுவதிமகால் வெளியீடு 1970–81–91

5 சிவஞான தீபம் உரை – சரசுவதிமகால் வெளியீடு 1970

6 சிவப்பிரகாச விகாசம் உரை – சரசுவதிமகால் வெளியீடு 1977

ஆ) உரைவரைவுகள் (தாமே உரை எழுதி வெளியிட்டனவை)

7 முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் உரை 1958

8 சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரை 1967

9 தமிழகக் கல்வெட்டு விளக்கவுரை (மு. கோவிந்தராசனாருடன் இணைந்து எழுதியவை) 1967–58

10 திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை 1956

11 திருவாசகக்கோயில், திருப்பதிகம் உரை 1981

12 சிவபுராணச் சிற்றுரை 1986 - 69

13 சதமணிமாலை மூலமும் உரையும் 1990

14 சித்தாந்த சிகாமணி அங்கத்தலத்திரட்டு உரை 1992

15 ஸ்ரீமத்சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி 1993

2. பதிப்பு நூல்கள்:

(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)

16 வீரசைவப் பிரமாணம் 1936

17 சதமணிமாலை (மூலம் மட்டும்) 1938

18 சிவப்பிரகாச விகாசம் (மூலம் மட்டும்) 1939

19 காமநாதர் கோவை 1947

20 மேன்மைப் பதிகம் 1957

21 சதுர்லிங்க தசகோத்திர சதகம் 1958

3. ஆராய்ச்சி நூல்கள்:

22 தொல்காப்பியம் – எழுத்து இளம்பூரணம் 1969

23 'ஐவகையடியும்' என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப் பல்கலைக் கழகம்) 1977

24 தமிழ்இலக்கண இலக்கியங்களில் சைவசித்தாந்தம் 1978

25 தொல்காப்பியம் – சொல் – இளம்பூரணம் (தமிழ்ப் பல்கலைக் கழகம்) 1990

26 தொல்காப்பியம் – பொருள் – செய்யுளியல் (தமிழ்ப் பல்கலைக் கழகம்) 1985

27 தொல்காப்பியம் – பொருள் – எட்டு இயல் மட்டும் (தமிழ்ப் பல்கலைக் கழகம் அச்சில்)

4. படைப்பிலக்கிய நூல்கள்:

அ) செய்யுள் வடிவம்

28	பிள்ளைப் பாட்டு	1945
29	திருஅரசிலிக் காதை	1948
30	குழந்தை இலக்கியம்	1963
31	சான்றாண்மை (கோப்பெருஞ்சோழன் பற்றியது)	1964–1975
32	சென்னிமலை முருகன் தோத்திரம்	1980
33	அரசியல் இயக்கம்	1981
34	பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் (குழந்தை இலக்கியம்)	1983
35	அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம்	1984
36	உளத்தூய்மை	1984–94
37	தண்ணிழல் (திருமுடிக்காரியைப் பற்றிய அரிய இலக்கியம்)	1990
38	மறவர் நத்தக்குன்றமரும் திருமுருகன் திருவடிப் பாமாலை	1993
39	தொழிலியல்	1993
40	மெய்ப் பொருட் காதை	1995
41	தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும்	

ஆ) உரைநடை

42	எங்களூர்	193.
43	தொடக்கப்பள்ளி – நாடகம்	1949
44	வீரசைவ சிவ பூஜாவிதி	1976
45	விலையேற்றமும் வாழும் வழியும்	1984

பொருள்முட்டுப் பாட்டினால் முடங்கிக் கிடக்கும் அச்சேறா நூல்கள்

1 குழந்தை இலக்கியம் (தொகுதி மூன்று)

2 குதம்பைச் சித்தர் பாடலும் உரையும்

3 கலித்தொகை உரை (குறிஞ்சிக் கலி)

4 தொல்காப்பியச் செய்யுளியல் ஆராய்ச்சி (உரைநடை)

5 பிரபுலிங்கலீலை உரை

6 அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்

7 அடிகளாசிரியரின் இலக்கணக் கட்டுரைகள்

8 அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்

9 திருக்குறள் உரை (133 குறள் வரை)

10 முப்பால் – உரைநடை

11 மகாவாக்கிய ஆராய்ச்சி

—:—

தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும்

எல்லாரும் ஒருமனத்தால் இயற்றுவமே **தமிழ்த்தொண்டு**

எல்லாரும் ஒருமனத்தால் இயற்றுவமே **தமிழ்வளர்ச்சி**

எல்லாரும் ஒருமனத்தால் இயற்றுவமே **தமிழ்ப்புதுநூல்**

எல்லாரும் ஒருமனத்தால் இயற்றுவமே **தமிழ்த்திருநாள்**

பேராசிரியர் திரு. அடிகளாசிரியர்